**January 1912.** **Registered No. M. 925.**

உ

# செந்தமிழ்ச்செல்வம்

## திரிசிரபுரத்து மாதந்தோறும் வெளிவரும்.
## ஒரு தமிழ்ப் பத்திரிகை.

செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வ மச்செல்வம்
செல்வத்து ளெல்லாந் தலை.

தொகுதி 1.] விரோதிகிருது-ஹூ தை-மீ 1-உ [பகுதி-10

உள்ளுறை. பக்கம்


| | |
|---|---|
| சைவசித்தாந்த மகாசமாஜத்தின் 6-வது வருஷப்பூர்த்திகொண்டாட்டம் | 213 |
| திருப்பெருந்துறை விளக்கம் | 217 |
| சன்மார்க்ககிர்த்தியங்கள் | 221 |
| கம்பராமாயணச் செய்யுளாராய்ச்சி | 223 |
| மனோகரன். | 225 |
| தமிழ்மறையனுதித்வம் | 228 |
| சைவசித்தாந்தசாதனம் | 229 |
| ஓர் வேண்டுகோள் | 230 |
| விநோதக்கூற்று. | 231 |
| மாணிக்கஜோதி | 231 |
| ஓர் ஆகாயப் பிரயாணி. | 234 |
| சமாச்சாரக்குறிப்புகள். | |


பத்திராதிபர்:—பண்டிதர், அமிர்தம், சுந்தரநாதபிள்ளை.
திரிசிரபுரம்.

வருஷசந்தா ரூ. 1. } தபாற்கூலி அணா. 4. }

Copy Right Registered.

{ வெளிநாட்டுக்கு ரூ. 2. { தனி சஞ்சிகை அணா. 2.

விளம்பர விகிதம் பக்கம் ஒன்றுக்கு ரூ. 1—8—0.

மாதிரி பத்திரிகை, 0—3—0.

லக்ஷ்மி விலாஸ் பிரஸ், திருச்சி.

# செந்தமிழ்ச்செல்வம்

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

பகுதி-1.] விரோதிகிருது-௵ தை-மீ 1-உ [தொகுதி 10

## சைவசித்தாந்த மகாசமாஜத்தின் ஆறாவது வருடப் பூர்த்திக்கொண்டாட்டம்.

"சைவ சமயமே சமயம்" என்னும் உண்மையையுலகினர் யாருமிந்நாளிலுமுணரத் திருவருட் செயலால் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரநாயகர் அவர்களும் ஸ்ரீலஸ்ரீ நல்லசாமிப்பிள்ளையவர்களும் தோன்றினர் என்பது சைவமத ஆராய்ச்சி செய்யப் புகுந்தாரெல்லோருமறிந்த விஷயமே.

நம், ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரநாயகர் அவர்கள் பல மதத்தார்விடுத்த கடாக்களையெல்லாமிறுத்துச் சைவத்தின் உண்மையையும் பெருமையையுங்காட்டி யுலகில் நாட்டித் தன் புகழை யுலகெலாம் பரவவிட்டுச் சிவசாயுச்சியமாயினர் என்பது உலகெலாமறிந்த விஷயமன்றோ?

ஸ்ரீலஸ்ரீ J. M நல்லசாமிப்பிள்ளை யவர்களும் சமய குரவர்களும் சந்தானகுரவர்களும் திருவாய்மலர்ந்து அருளிச்செய்த அருமைத்திருவாக்குகளை முற்றுங்கற்றுணர்ந்து அதன் மெய்ப் பொருளைக்கண்டு தெளிந்து அவைகளையெல்லாம் நம்மவர் உணரத் தமிழ்மொழியிலும் கடலிற்கப்புறத்தாரும், மறு உலகத்துள்ளாரும் (N. & S. America i. e. Western Hemisphere) என்று கருதப்படும் பல கண்டத்து மக்களுமுணர வாங்கிலத்தும் மொழிபெயர்த்து உலகெலாம் பரவச் செய்து சைவந்தளிர்க்கச் செய்து வருவதை யறியாதாரார்?

சைவம் பரவவேண்டுமென்றும் எல்லோரும் சைவசமயத்தின் உண்மை அறியவேண்டுமென்றும் நமது ஸ்ரீமான் J. M. நல்லசாமிப்பிள்ளையவர்கள் சித்தாந்ததீபிகை (Light of Truth) என்னும் பத்திரிகையில் பலவருடங்களாக சித்தாந்தங்களைவிளங்க எழுதிக்கொண்டுவருகின்றனர். இதுபோதாதென்று "சைவசித்தாந்த மகா சமாஜ"மென்னும் ஒருமகாசமாஜத்தையும் சில வருடங்களாக நடத்திவருகின்றனர்.

இது பல புலவர்களையும் அங்கத்தினர்களையும் பெற்று மிகப்புகழ் பெற்றுப் பரவுகின்றது. நாளுக்கு நாள் பிறைச்சந்திரன் போலவே வளர்ந்து வருகின்றது. ஒவ்வொருவருடமும் வருடப்பூர்த்தி முக்கியமான பட்டணங்களில் மிக விமரிசையாக நடத்தப்பெற்றுவருகின்றது.

மகாசமாஜத்தின் ஆறாவது வருடப்பூர்த்தி சென்னை யிராஜதானியின் பிரதானபட்டணமாகியசென்னைப்பட்டினத்தில் டவுன் ஹாலில்(Town Hall) 1911-ஆம் டிசம்பர்மீ 27, 28, 29-ம் தேதிகளில் மிகவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது. கண்டவரும் கேட்டவரும் மிகக்கொண்டாடினர். தமிழ்நாட்டின் பல பக்கங்களிலிருந்தும் புலவர்கள் ஆங்கு வந்து பிரசங்கித்துப் பொதுஜன உபகாரஞ் செய்தனர். இச்சமாஜத்தின் இந்த 6வது வருஷப்பூர்த்தியிற் பிரசங்கித்த புலவர்களும் அவர்கள் பிரசங்கித்தவிஷயமும் கீழே குறிக்கின்றாம்.

# சைவசித்தாந்தமகா சமாஜத்தின் ஆறாவது வருட மகாஜனக் கூட்டம்.

* அக்கிராசனர்— ஸ்ரீமான் J. M நல்லசாமிப் பிள்ளை அவர்கள், (District Munsiff, Guntur.)

**1911-ஆம் டிசம்பர்-மீ 27-உ புதவாரம்.**

சைவப் பிரசாரர்களும், விளக்கப்பட்டவிஷயமும், விஷயங்களும், பாஷையும்.

1. ஸ்ரீமான், திருநெல்வேலி S. பால்வண்ண முதலியார் அவர்கள், **சிவானந்தம்**, தமிழ்.
2. பிரம்மஸ்ரீ, மதுரை, ம. கல்யாணசுந்தரப்பட்டரவர்கள். **சைவாகமப் பிராமணியம்.** தமிழ்.
3. ஸ்ரீமத், சுவாமி வேதாசலம் அவர்கள், ஞானசாகரம் பத்திரிகாசிரியர். **ஆன்மபோதம்.** தமிழ்
4. ஸ்ரீமான், R. S. ஷண்முக முதலியாரவர்கள் (Pleader, Salem.) **சைவ சித்தாந்த சாதனம்.** தமிழ்.
5. யாழ்ப்பாணம் வண்ணைநகர் ஸ்ரீமான் சுவாமிநாத பண்டிதரவர்கள், **தண்ணளிச் சமயம்.** தமிழ்.

**1911-ஆம் டிசம்பர்-மீ 28-உ குருவாரம்.**

6. பிரம்மஸ்ரீ, குளித்தலை A. அரங்கசாமி ஐயரவர்கள், **மலத்திரயம்.** ஆங்கிலம்.
7. ஸ்ரீமான், பொ. முத்தையாபிள்ளையவர்கள், தூத்துக்குடி, சித்தாந்த சபையின் சபைத் தலைவர். **மணிமந்திர ஔஷதம்.** தமிழ்.

---

* ஸ்ரீமான் T. பொன்னம்பலம்பிள்ளை அவர்கள், (M. R. A. S. Retired Excise Commissioner of Travancore) அக்ராசனம் வகிக்க ஒப்புக்கொண்டு வரும் வழியில் சில அசந்தர்ப்பத்தால் வரத்தடைப்பட்டமையால் ஸ்ரீமாந் நல்லசாமிப்பிள்ளையவர்கள், சபையாரின் விருப்பப்படி அக்ராசனம் வகித்தார்கள்.

8. ஸ்ரீமத், சுவாமி, விருதை சிவஞானயோகிகள் (தமிழ்ப்பிரம சூத்திராசிரியர்) **அத்வைத சித்தாந்தம்.** தமிழ்.

9. ஸ்ரீமான், பெங்களூர், A. ஏகாம்பரமுதலியாரவர்கள், **பசுத்வமும் பாசவீடும்.** தமிழ்.

10. சிக்கந்தராபாத்து ஸ்ரீமதி, ஆண்டாளம்மாளவர்கள், **சிவலிங்க மகத்துவம்.** தமிழ்.

11. ஸ்ரீமத், தியாகராஜ ஞானியாரவர்கள், கமலாசனி பத்திராதிபர். **முத்தி நெறி.** தமிழ்.

12. ஸ்ரீமான் அம்பாசமுத்திரம் V. P. கார்த்திமதிநாதம் பிள்ளையவர்கள். **சைவ சித்தாந்த ஆராய்ச்சி.** ஆங்கிலம்.

13. ஸ்ரீமான், அ. சுந்தரநாதம் பிள்ளையவர்கள், செந்தமிழ்ச் செல்வம் பத்திராதிபரும், திருச்சிராப்பள்ளி (S. P. G. College) தமிழ்ப் பண்டிதரும். **தமிழும் சைவசமயமும்.** தமிழ்.

14. ஸ்ரீமான், C. R. சொக்கலிங்க முதலியாரவர்கள், சென்னை ஸ்ரீநடராஜ பக்தஜன சபை காரியதரிசி. **உபாசனை.** தமிழ்.

15. பிரமஸ்ரீ காஞ்சீபுரம், சேஷகிரி தீக்ஷிதர். **பசுபதி மகத்துவம்.** தமிழ்.

16. ஸ்ரீமத், ம-தி. பாநுகவி சுவாமிகள். **யோகம்.** தமிழ்.

**1911௵ டிசம்பர்-மீ 29-உ சுக்கிரவாரம்.**

17. ஸ்ரீமான், இராயப்பேட்டை-திரு-வி. கல்யாண சுந்தரமுதலியாரவர்கள் **சைவன்.** தமிழ்.

18. ஸ்ரீமான், P. C. வள்ளல் சிவஞானதேசிகரவர்கள், பாளையங்கோட்டை சைவசமயாபிவிருத்தி சபையின் காரியதரிசி. **நம்சமய உண்மையும் நம்மவர் கொள்கையும்.** தமிழ்.

19. ஸ்ரீமான், S. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள். B. A. இராயப்பேட்டை, பால சுப்பிரமணிய பக்தஜனசபையின் காரியதரிசி. **ஆலய வழிப்பாட்டின் நோக்கம்.** தமிழ்.

20. ஸ்ரீமான், S. R. சீனிவாசப் பிள்ளையவர்களும், ஸ்ரீமான் இ. ஆதிமூல முதலியாரவர்களும், **சைவ சமயத்தின் நிலைமையும் சைவர்களின் கடமையும்.** தமிழ்.

21. ஸ்ரீமதி, அசலாம்பிகையம்மாளவர்கள் **இளையான் குடிமாற நாயனார் புராணம்.** தமிழ்.

22. ஸ்ரீமான், சித்தாந்தசரபம் அஷ்டாவதானம்-பூவை-கலியாண சுந்தர முதலியாரவர்கள். **பற்று.** தமிழ்.

மேற்கூறிய வாறு பிரசங்கித்த புலவர் கூட்டங்களில் இருவர் பெண்பாலார். ஸ்ரீமதி பண்டிதை ஆண்டாளம்மாள் அவர்கள் பிரசங்

ப் பெருமையையும் அருமையையும் பேசிப் புகழ்ந்தார் ஒருவரு மில்லை. ஸ்ரீமதி பண்டிதை அசாலாம்பிகை அம்மாளவர்களின் பிரசங்க இனிமையையும் நுட்ப ஆராய்ச்சியையும் இயம்பிப் பாராட்டுநரும் இல்லை. இவ்வண்ணம் நமது நாட்டுப் பெண்பாலாரெல்லாம் முன்னுக்குவரின் நமது நாடு முன்னுக்குவராதிருக்குமா? இவ்வளவுக்கும் மூலபுருடராகவிருக்கும் ஸ்ரீமான் J. M. நல்லசாமிப்பிள்ளை அவர்களை நம்மவர் புகழ்ந்து வாழ்த்தக் கடமைப் பட்டவர்களே.

நமது ஸ்ரீமான் J. M. நல்லசாமிப்பிள்ளையவர்களைப்பற்றி எனது தந்தையார் (திரிசிரபுரம் அமிர்தகவி அமிர்தம் பிள்ளையவர்கள்) தமிழின் சிறப்பைக்கூற வந்த "தமிழ் விடு தூது" என்னும் நூலில் நேயர்களிற் சிலரைக் கூறியுள்ள விடத்துக் கூறிய சில கண்ணிகளை எடுத்துக்காட்டுவது அவசியமாதலின் இங்கு காட்டி இவ்விஷயத்தை நிறுத்துவாம்.

—சொல்லுமவன்

தூயப் பெருந்தந்தை தன்னை நிகர்செல்வன்
நாயன்கு மாரசா மிச்சுகுலன்—நேயத்
தவப்புதல்வன் மாணிக்கமென்னும்பேர்த் தக்கோன்
தவப்புதல்வன் கற்பகப்பூந் தாரு—தவப்புகழ்சேர்
சுப்பரா யச்செல்வத் தோன்ற லுழுவன்போர்
நப்படிவு கொண்டுவந்த நல்லிளவல்—செப்புந்
தமிழ்க்கடலிற் பன்னூலாந் தண்டுறைகள் கண்டோ
னிமிழ்க்கும் புகழாங்கி லேயத்—துமிக்குயரும்
பீயேபீ யெல்பட்டம் பெற்றோ னழகுடைமால்
சேயே யெனுமழகன் சீரியோன்—தூய
சிவஞான போதந் திருவருட்ப யன்னுந்
தவஞான நூல்க டமையாய்ந்—தவமாற
வங்கிலே யத்தின் மொழிபெயர்த்தங் காருமுய்ய
விங்கிலாந் தெங்கு மிலங்குவித்தோன்—றுங்கவியல்
விக்டோரி யாப்பேர் விராசக் கரத்தலைவி
பட்டத் தரசியலின் பாங்கமைந்த—கட்டளையால்
நீதிச் சபையி னிருபனு மெவ்வழக்கும்
வாதத் தியல்பறிந்து மாண்டுலைபோற்—றீதகற்றி
நீதி நடத்துமெனு நீதிப திநிலத்தார்
கோதிலா மேக மெனுங்கொடையன்—மேதினியி
லெண்கண் ணிறந்த வினிமை மலிநண்பன்
றன்கண் ணிறைந்த தயாளகுணன்—புன்கண்டீர்
நல்லசா மிக்குருபர் பாகப்பெண் சாமி யன்பன்
நல்லசா மிப்பேர் நயசீலன். ("தமிழ் விடு தூது")

பத்திராதிபர்.

## திருப்பெருந்துறை விளக்கம்.

(204-ம் பக்கத் தொடர்ச்சி.)

காவிரிப்பூம் பட்டினம், நாகைப் பட்டினம், அம்மாப் பட்டினம், அதிராம் பட்டினம், சென்னைப் பட்டினம் முதலாகிய கடற்கரைக் கப்பற் றுறைமுகப் பட்டினங்களுக்குள்ள பெயர்ப்பிரயோகங்களே மேற் காட்டிய 2-வது செய்யுளுக்குச் சான்றும். ஈரோடு ரெயில்வே ஸ்டேஷனுக்குச் சமீபம் பெருவழி யென்ற பொருளைப் பயந்துகொண்டு "பெருந்துறை" யென்ற ஓர் சிற்றூருண்டு. அவ்வூரில் ரெயில்வே ஸ்டேஷனுங்கூட. சமுத்திரக்கரைக்கு மித்தலத்திற்கும் இருநூறு மைலிருக்கலாம். இன்னமுஞ் சொல்வோம். திருப்பேணு பெருந்துறை யென்ற தேவாரப் பதிகம் பெற்ற சிவ தலமொன்று சோழ நாட்டில் கும்பகோணத்துக்குத் தென்கீழ்த் திசையில் சுமார் கக-மைல் தூரத்திலுள. இத்தலத்துக்குஞ் சமுத்திரத்துக்கும் அநேகங்காத தூரம். அரசலாறு என வழங்கும் நதிக்கரையிலுளவாகலின் பெருந்துறையெனவும் பேர்பெற்றது. ஸ்ரீ ஆளுடையபிள்ளையாரின் தேவாரம் "அணியார் நீலமாகிய கண்டரரிசிலுருஞ் சுகரைமேல், மணி வாய் நீலம் வாய் கமழ் தேறல் மல்கு பெருந்துறையாரே" என்ற திராவிட வேதமுஞ் சான்றுரைக்கின்றது. சிதம்பரட் சேத்திரத்தில் அட்சேத்திர வெல்லைக்குள் கீழ்பாகத்தில் "திருப்பெருந்துறை" யெனப் பெயர் வழங்குமோரிடமுள. இது சுமார் 10 ஏக்கர் விஸ்தீரணமுள்ள பூமி. இதில் மிக்க புராதீனமாயுள்ளதும் தற்காலம் மிகக்கிலமடைந்ததுமான சில கல்மண்டபங்களும் சிறுகோயில்களுமுண்டு. இவை யெல்லாம் இலிங்கதாரண முள்ள வீரசைவாள் சுவாதீனத்தி லிருக்கின்றன. இந்த விடம் ஸ்ரீமன் மாணிக்கவாசகசுவாமிகள் (அவர்கள் சரித்திரத்திற் கூறுகிறபடி) அநேக காலம் தபோநிஷ்டை செய்த விடமென்று கர்ண பரம்பரையாய்ச் சொல்லப்பட்டு வருவதுடன் இத்தலம் தபோவன மென்னும் பெயராலு மழைக்கப்பட்டு வருகிறது. இங்குள்ள புராதீன ஆலயத்துக்குள் மாணிக்கவாசக சுவாமிகள் நிஷ்டையிலிருக்குமாறு காட்டிய சிலாத்திருவுருவ விக்கிரகமும் விளங்கிக் கொண்டிருக்கிறது. இத்தலமுஞ் சமுத்திரத்துக் கடுத்ததல்ல. இவ்வாறிருக்கத் திருப்பெருந்துறை யென்னும் பெயரித்தலத்திற் கெய்தியதற்குக் காரணமென்னை? இராமர் சென்ற விடமெல்லாம் அயோத்தி யென்பது போல மாணிக்கவாசக சுவாமிகள் ஞானோபதேசம் பெற்ற தலமாகிய திருப்பெருந்துறையை விட்டு இங்கெய்திச் சிலயோகக்திருந்தமையாலல்லவா வித்தலத்திற்குந் திருப்பெருந்துறை யென்று வழங்கப்பட்டு வருகிறது. புராதீன நூல்களாகிய சங்க நூல்களில் பெருந்துறை யென்றதொடர்பதம், நதிஅல்லது தடாக தீரங்களையே காட்டவெடுத்தாண்டிருப்பதைக் காட்டுதும். ஐங்குறு நூறு ௯௧-௯௨-எ௯-எ௫ செய்யுட்களில் முறையே. "முடமுதிர்மருதத்துப் * பெருந்துறை"

"மருதுயர்ந் தோங்கிவிரி பூம் பெருந் * துறை"
"தண்ணென்றிசினே பெருந் * துறைப் புனலே"
"தொன்னிலை மருதத்துப் பெருந் * துறை" யெனவும்
பதிற்றுப் பத்து, ௨௩-௪௮-செய்யுட்களில் முறையே,
"மணல் மலிபெருந் † துறைத் ததைந்த காஞ்சியொடு"
"தீம்புனலாடுங் காஞ்சியம்பெருந் † துறை மணலினும்பலவே"
யெனவும், பத்துப்பாட்டி லொன்றாகிய பெரும்பாணாற்றுப் படை, ௩௮௯ அடியில்,

"பொய்யாமரபிற் பூமலி ‡ பெருந்துறை" யெனவும் போந்த பிரயோகங்களால் கடலை யொழிந்த பொய்கையினையும் ஆற்றினையுமடுத்த விடங்களுக்குப் பெருந்துறை யெனக்கூறியுள்ளதை நம் நண்பர் பல்லோரு மறியவேண்டுகின்றோம்.

மேற்கூறிய பதிற்றுப் பத்திலேயே ௫௫-௫௮ செய்யுட்களில் பெருந்துறையென்ற தொடர்மொழியைச் சமுத்திரதீரத்துக் கடுத்ததாகப் பிரயோகிக்க நேரிட்டவமயத்தில் "இன்னிசைப்புணரியிரங்கும் பௌவத்து நன்கல வெறுக்கைத்துஞ் சமபந்தர்க் கானலம் பெருந்துறை" யென்றும் "கமழுந்தாழைக் கானகப் பெருந்துறைத் தண் கடற் பரப்பை நண்ணூட்டுப் பொருந" என்றும் பௌவம், தாழை, கடல், கானல் என்ற நெய்தநிலத்துக்குரிய பொருளைப் பயக்குஞ் சிறப்புப்பெயர்களாகிய அடை கொடுத்துக் கூறியுமிருப்பதையுஞ் செவ்வனே கவனிக்கவேண்டும். இத்தியாதி பிரபல பிரமாணங்களால் நமது பரிசுத்தமான திருப்பெருந்துறை யென்னுந் தலமும் முந்தியே யெடுத்துக்காட்டியிருக்கிறவாறு மற்றைய சிவ தலங்களைப்போலவேயோர் நதி தீரத்தி லுள்ள சிவ தலமென்றே முடிபுக்குவரவேண்டும். திருப்பெருந்துறை யெந்நதிக்கரையி லுளதென வினவுவோர்க்குப் பாண்டி நாட்டுக்குத் தாவெல்லையாகிய தெட்சண சுவேத நதியின் றென்கரையி லுளதெனச் சுலபமாய் விடையிறுக்கலாம். இந்நதியைக்கூறியது சரித்திர ஆராய்ச்சியாருட் சிலரைப்போல் சமயோசிதக் கூற்றல்ல.

"வெள்ளாறதுவடக்காம் மேற்குப்பெருவழியாந்
தெள்ளார் புனற் கன்னிதெற்காகும்—உள்ளார
ஆண்டகடல் கிழக்காமைம்பத்தறுகாதம்
பாண்டிநாட்டெல்லைப்பதி" எனும் ஆன்றோரியற்றிய பண்டையச்

---

* இப்பிரயோகங்களில் மருதநிலத் தூரின் ஓர் பொய்கையின் ஸ்நானகட்டத்திற்கும் பெருந்துறை யென்றுரைக்கப் பட்டிருக்கின்றது.

† மருதநிலத்தூரின் ஓர் நதியின் ஸ்நான கட்டத்திற்குப் பெருந்துறை யென்று கூறியிருக்கிறது.

‡ காஞ்சீபுரத்தில் கம்பா நதியின் ஸ்நான கட்டத்தைப் பெருந்துறையென்றழைக்கப்பட்டிருக்கிறது.

காலத்த வெண்பாவில் பாண்டி நாட்டுக்கு வடக்கெல்லை வெள்ளாறு என்று கூறியிருப்பதினாலறியலாம். ஸ்ரீருத்ரப்பிரச்சனகண்டமென்று ஓர் ஜோஸிய கிரந்தம் வடமொழியில் ரிஷிப்புரோக்தமாயிருப்பதாகத் தெரிகிறது. இவ்வரிய நூலின் பெருமையை இவ்வியாசத்தின் ?-ம் பாகத்தில் யெடுத்துக்காட்டப்படும். இக்கிரந்தத்தின் ஓர் பிரச்சனை யில் இத்தலத்தைக் குறிக்க நேரிட்டபோது "ஶ்வேதநத்யா: மஹாதீரே" "ஸ்வேதநத்யா: மஹாதீரே" என்று இத்தலத்துக்கு எல்லை குறிப்பிட்டிருக்கிறது. திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்து மஹாவித்துவ சிரோன்மணியாகிய திரிசிரபுரம் ஸ்ரீலஸ்ரீ மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்களும் தாமியற்றிய திருப்பெருந்துறைத் தலப்புராணத்திலித் தலத்தைக் குறிப்பிடுங்கால்.

" * * * நீள் வெள்ளை
நதியுமோர் புறம்படைத்தது பெருந்துறை நகரம்" எனப்புரா தீன நூல்களையு மனுபவத்தையுந்தழுவி உரைத்திருக்கிறார்கள். இவை களோடுங்கூட ஆளுடையார் கோயிலுக்குத் திருப்பெருந்துறையெ னப் பெயரெய்தியதற்குப் புராணோக்தமாய் வேறோர் சரித்திரமுமுண்டு. ஆளுடையார் கோயிலுக்கு அநாதியாயுண்டான பெயர் அநாதி மூர்த் தியூர். பிறகு ஒவ்வொரு காரணம்பற்றித்திருப்பெருந்துறை, சிவபுரம், ஞானக்ஷேத்திரம், எனப் பல பெயர்களுண்டா யிருக்கின்றன. திரு வாதவூராடிகளை யாட்கொண்டமையால் ஆளுடையார் கோயிலென்று பிற்காலப் பெயராயுண்டாயிற்று. இப்பெயர் கடைசியாகக் கலியுக ஆரம்பத்திலெய்தினமையால் இத்தலமிப்பெயராலேயே தமிழ் நாடு முழுவதிலுமழைக்கப்பட்டு வருவதுமன்றி முந்திய இராஜாங்கக்கணக் கிலும் தற்கால இராஜாங்கக் கணக்கிலுமிப்பெயரே வழங்கிவருகிறது. திருப்பெருந்துறையெனப் பெயரெய்தியதற்குக் காரணம் வருமாறு. இத்தலத்தின் அர்ச்சகர்களுக்குப் பூர்வத்தில் பாண்டிய அரசர்களால் மானியமாக விடப்பட்டிருந்த பூமியைச் சிற்றரசனாகவிருந்த குறும்பத் தலைவன் ஒருவன் பலாத்காரமாகக் கட்டிக்கொண்டான் அர்ச்சகர்கள் மதுரைக்கு வந்து பாண்டியவரசனிடம் முறையிட அவன் அர்ச்சகர் களை நோக்கி உங்கள் நிலமென்பதற்கு மூலசாஸன முண்டா வென வினவ, அதையுங் குறும்பத் தலைவன் சூதாகக் கைப்பற்றிக்கொண்ட தாக விடையிறுக்க அநுபவ சாட்சியமாவ துண்டா வென்றுசர்வ, விவாத பூமியில் எத்துணை ஆளம் வெட்டினும் நீரூற்றமே கிடையா தென்று குறும்பத் தலைவன் நிலத்தின் தன்மையைக்கூற, வயோதிகப் பிராமண வடிவங்கொண்டு அர்ச்சகருக்குத்துணையாய் வந்திருந்த எல் லாம் வல்லகடவுள் அதைமறுத்து மண்வெட்டியினால் ஓர் வெட்டுவெட் டினபோதே ஜலம் பிரவாகித்து மேலே பொங்குமென்றும் அந்நிலமே அர்ச்சகர் பூமியென்றுஞ் சொல்ல, அது விஷயத்தை நேரில் பார்த்துத் தீர்மானமளிப்பதாக அரசன் வாக்களித்து இத்தலஞ்சென்று சோதித் தான். ஒரு இடத்தில் மண் வெட்டியினால் ஒருவெட்டு வெட்டினதும்

ருமொன்று தீர்த்தம் மேலே கிளம்பிப்பெருக் கெடுத்தது. மற்றோ ரிடத்தை யிவ்வாறு பார்த்தார்கள். அங்கும் ஜலம் பெருக்கெடுத்தது. பின்னுமொரிடத்தைச் சோதித்தார்கள் அங்குமவ்வாறே நிகழ்ந்தது இவ்வாறுகண்டதிக்கெல்லாம் ஜலப் பெருக்கெடுத்து நகரமெங்கும் பெருவெள்ளமாயிற்று. இதினாற்றான் திருப்பெருந்துறை யெனப்பெயர் எய்தியது. மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களியற்றிய திருப்பெருந்துறைப் புராணம், பெருந்துறைச்சருக்கம் ௭௬-வது செய்யுள் " ஒழிதரான் வெட்டுந் தோறுமூறு புனல்பெருகியெங்கும். வழிதரப்பரவலாலே பெருந்துறை யெனும் பேர்வாய்ந்த " எனும் பிரமாணத்தாலறியலாம். இந்நிகழ்ச்சி மாணிக்கவாசக சுவாமிகள் காலத்துக்கு முந்தியது. வடமொழி ஹாலாஸ்யமான்மியத்திலும் இப்பொருளையே கொடுக்கும் மஹாதீர்த்த: என இத்தலத்துக்குப் பெயர்சொல்லப்பட்டிருக்கிறது இச்சரித்திர விரிவையெல்லாம் மேற்கூறிய திருப்பெருந் துறைப் புராணம்-தஞ்சை அரண்மனை சரஸ்வதி மாலிலிருந்துஇப்போதுதான் கிடைத்திருக்கிற சுந்தரலிங்க முனிவரால் சுமார் ௧உ0-வருடங்களுக்கு முன்னியற்றப்பட்டிருக்கிற திருப்பெருந்துறைப் புராணம் வடமொழிபௌஷ்யபுராணத்தில் இத்தலமஹாத்மியம் கூறவெழுந்தபிரக்தீர்த்தஸ்தல மகாத்மியம் வடமொழி ஆதிகைலாசமான்மியம் இவைகளில் பாக்கக் காணலாம்-மேற்சொல்லிய வடமொழி கிரந்தம் உ-ம் மிக்க பழமையானரிஷிப்புரோக்தமான வாக்கியங்களாயுள்ளவை. சுமார்-அா-வருடத்திற்கு முந்தியதான நம்பியார் திருவிளையாடற்புராணம் உஎ ஞானோபதேசஞ்செய்தபடலம்- ௬௬ -வது செய்யுளிலும் இச்சரித்திரத்தைக் குறிப்பாய்க் காட்டியுமிருக்கிறது, அச்செய்யுளவருமாறு.

"பொருந்து தில்லைவனங்கடந்து போந்து வேந்தற்சேர்ந்தருளின்
வருந்தவுடலந்தனிவிருத்தமறையோனாகி மறையோர்கட்
கிரங்கியருங்கிழ் நீர்காட்டி யிரங்கல்மீட்ட பெருமானே
குருந்தவரம் பிற்காந்தமறைக் கொழுந்தேசெழும் பொற்றாள்
போற்றி"

என்பதே. இச்செய்யுளில் " கீழ்நீர்காட்டி " யெனப்பிரயோகித்திருக்கிற அருமைத்திருவாக்கின் அற்புதத்தைபென்னவென்று சொல்லலாம். ஆருடையார் கோயிலென்னும் நகரத்தில் குடியிருப்பு ஊருக்குச்சற்று ½-மைலுக்கு வடபாகத்தில், கோயிலர்ச்சகருள் ஒருபிராமணச் சிரேஷ்டருக்கு விடப்பட்டு அந்த வம்சத்தில் இன்றுகாறுமிருந்து கொண்டிருக்கிற ஓர்நன்செய் மானியவயலின் மத்தியிலுள்ள ஒரு சிறு பூமிக்குக் கீழநீர்காட்டியெனப் பூர்வந்தொட்டுப் பெயர் வழங்கிவருகிறது.

(இன்னும்வரும்)

திரு. சாம்பசிவம்பிள்ளை.
(Retired Sub-Magistrate, Trichinopoly.)

## " சன்மார்க்ககிர்த்தியங்கள். "

(211-ம் பக்கத்தொடர்ச்சி.)

கடைசியாகக் கடன் வாங்குதலினின்றும் தப்பிக் கொள்வதற்கு ஏதுகரமான சிலவற்றை எடுத்துக்கூறுவோம்.

1. முன்யோசனை:—சிறுபிள்ளைகள் எப்பொழுதும் தற்காலத்தைப் பற்றியே நினைப்பது இயற்கையாக இருக்கின்றது. அவர்கள் தாங்கள் பின்னால் அநுபவிக்கும் பலாபலன்களைச்சற்றேனும் கவனியாது தற்சமயத்தில் தங்களுக்குவேண்டியதையே விரும்பி தங்களது அபேக்ஷையைப்பூர்த்திசெய்து கொள்ளுகிறார்கள். தனக்கு முன்னிருப்பது கிணறென்றும் அறியாமற் போய் விழுந்தழியும் மூடரைப் போலிருக்கிறார்கள். இவ்விதமாகவே சரியானபருவ மடைந்தவர்கள் இருக்கிறார்களென்பது எவருக்கும் நோவை உண்டாக்குகின்றது. என்னபரிதாபமான நிலைமை! ஆனதுபற்றி சரியான் உத்தமனைப் போல் நேர்மையாகவிருந்து பின்வருவனவற்றை மனதில் எண்ணி அதற்குச்சரியாக நடத்தையைச்சீர்ப்படுத்துங்கள்.

2. வரவுக்குத்தகுந்த செலவுசெய்:—ஆங்கிலேய நூலாசிரியரான (John son) டாக்டர் ஜான்ஸன் உன்னிடத்திலிருக்கிற எல்லாவற்றினும் அதிகக்குறைவாகவே செலவுசெய் என்று கூறி விளக்குகின்றார். உனது வருமானங்களை யெல்லாம் சரியாக அளவிட்டுக்கொள். உனது வரும்படியில் கொஞ்சமாவது பத்திரப்படுத்தி வைத்துக் கொள்ளவேண்டும்.

3. உன்னுடைய செலவுக்குக் கணக்கெடு:—பலதுளி பெருவெள்ளம் என்றவாறு அற்ப விஷயங்களில் செலவுக்கும் கொஞ்சத்தொகையானது எவ்வளவு அதிகமாயிருக்கிறது. அப்படி நீ காண்பதினால் அடுத்தடவை நீ செலவுசெய்யும்பொழுது முன்னதைப் பார்க்கிலும் குறைத்துக்கொள்ள உனக்குப் போதுமான அத்தாட்சியாயிருக்கிறது.

4. எச்சாமானையும் பணமில்லாமல் கடனுக்காக வாங்காதே:—எதைவாங்கின போதிலும் கையிலிருக்கும் பணத்தைக்கொடுத்து வாங்கவேண்டுமே அல்லாது நாளைக்குத் தருவேன் அல்லது இன்னும் இரண்டு மூன்று தினங்கள் பொறுத்துத்தருவேனென்று சொல்லிவாங்காதே. உன்னிடத்தில் பணமில்லாவிட்டால் யாதொன்றையும் வாங்கத்துணியாதே.

5. வீண்செலவைவிட்டு விலகு:—சிலர்தாங்கள் அநேகவருஷங்களாகக் கஷ்டப்பட்டுச் சேர்த்துவைத்த பணத்தை யெல்லாம் ஒரேநாளில் ஓர் கலியாணத்திலாவது மற்றும் அற்பவேடிக்கைகளைக் காட்டுவதிலாவது செலவழிக்கிறார்கள். அதின் பலன்யாது கூட்டத்திலிருந்து

பார்த்துக்கொண்டிருக்கும் பேராசையும் சோம்பேரித்தனமும் வீண் எண்ணங்களையும் கொண்டவர்களுடைய காலக்ஷேமே.

௭. ஒருவனுக்கும் ஜாமீன் கொடுக்காதே:—அப்படிக் கொடுப்பதினால் சிலர் அநுபவிக்கும் கஷ்டங்கள் பல தங்களுடைய சொத்தை இழப்பதுமல்லாமல் மானத்தையும் அழித்து விடுகிறார்கள். இதற்கு உதாரணமாக ஆங்கிலேய நூலாசிரியரும் கல்விக்கடலை உண்டவருமான (Shakespeare) ஷேக்ஸ் பியர் எழுதியுள்ள நாடகமாகிய வெனிஸ் வர்த்தகன் (Merchant of Venice) என்னும் கதையில் அந்தோனியோ என்னும் அந்தவர்த்தகன் தன்னுடைய சிநேகிதனாகிய பசானியோவுக்காகக் கடன்வாங்கிக் கொடுத்ததனால் வந்த பலனை நாமெல்லோரும் அறிந்திருக்கிறோம்,

இப்படியாக மேற்கூறிய சிறந்த நன்மைகள் பற்றி நேர்மையென்னும் ஆபரணத்தையே உனக்கு அணிகலமாகக்கொண்டும் தலையில் இடும் மலராகப்பாவித்தும் உன் அழகை விர்த்திசெய்விக்கும் ஓர் சாதனமாக ஏற்றும் அதை உனது மனமாகிய நிலத்தில் விதைத்து அன்பாகிய நீரைப்பாய்ச்சி துர்க்குணம் என்னும் களையைப்பிடுங்கி கடவுளின் பாதத்தில் சேர்க்கவல்ல நற்குணங்களாகிய கதிரை அறு.

சுத்தம் மாசற்ற மனத்தையும் குற்ற மற்ற நெஞ்சினையும் கறையில்லா எண்ணத்தையும் பழுதற்ற நோக்கத்தையும் நன்மைதரும் செயல்களையும் கைக்கொண்டு தீச்செயல்கள் போக, துர் எண்ணங்களைநீக்கி அஞ்ஞான இருளைப்போக்கி பிறர்மேல் அன் பென்னும் ஒளியைவீசிச் சன்மார்க்கபாதையைக் காட்டி, இவ்விதமாகத் தனதுநேயர்களையும் அரும்சகோதரர்களனைவரையும் நன்னெறியில் நடாத்தி, நம்மைப்படைத்த பிரமாண்டகோடி நாயகனாகிய கடவுளினது திருமலரடிகளைத் துதிசெய்யுமாறு உதவிபுரிந்து இப்பூவுலகில் தனது ஜீவியத்தை ஓட்டி உய்யும் புண்ணியவான்களே சுத்தவான்களென்று அழைக்கத்தகுதியுள்ளவராவர்,

தற்காலத்தில் வாலிபப்பிராயத்தை யடைந்தகாளைகளே யொத்தவர்களும் வனப்புப்பொருந்தியவர்களும் தைரியமென்னும் வீரத்தைக் கொண்டவர்களும் முரட்டுத்தனமென்னும் குணத்தைக் கையாடினவர்களுமான வாலிபருக்கு நேரிடும் பல்லாயிரம் சோதனைகளில் சுத்தத்தினின்று புரளுவது முக்கியமாகக் காணப்படுகிறது,

(இன்னும்வரும்)

GEORGE. RETHNASAMI,
S. P. G, College,
TRICHY.

# கம்பராமாயணச் செய்யுளாராய்ச்சி.

(134-ம் பக்கத் தொடர்ச்சி.)

இன்னும் இந்நூலிற் சிற்சில செய்யுள்களிற் பொருள் கோடற்கரியனவும் வேறு நூல்களிற் பெருவழக்காய்ப் பயின்று வாராதனவுமாகிய அடைமொழிகள் புணர்க்கப்பட்டுள்ளன. அவை திருகைவேலை (காப்புகளின் க-வது செய்யுள்) ஆசலம்புரி, (ஆற்றுப்படலம் க-வது செய்யுள்) திருமங்கை தன்வீறணிந்தவன், (ஷை உ-வது செய்யுள்) புள்ளிமால்வரை, (ஷை ச-வது செய்யுள்) வேளைவென்ற முகத்தியர், (நாட்டுப்படலம் உச-வது செய்யுள்) மசரதமனையவர், (திருவவதாரப் படலம் உஉ-வது செய்யுள்) நதிகாய்நெடுமானம், (அதிகாயன்வதைப் படலம் எ-வது செய்யுள்) என்றாற்போல்வன,

இவற்றுள் திருகைவேலை யென்பதற்கு முன்னர்க் காப்புச் செய்யுளுக்குப் பொருள்கூறியவிடத்துப் பொருள் கூறப்பட்டது. இனி, ஆசலம்புரி என்பதற்குக்குற்றத்தை நிரம்பச்செய்கின்ற வென்றுபொருள். அலம் = போதும். இது வடமொழி. எனவே போதுமானவளை குற்றத்தைச் செய்கின்ற என்றவாறும்.

இனித் திருமங்கை தன்வீறணிந்தவன் என்பதற்குத் திருமகளைத் தன்மார்பின்கண் அணிந்து கொண்டவனென்றுதல், திருமகளுடைய பெருமையை அலங்கரித்தவனென்றுதல் பொருள் கொள்க. வீறு = மார்பு, பெருமை.

புள்ளிமால்வரை யென்பது பரதகண்டத்துக்கு எல்லையாகிய பெரிய இமயமலையெனப் பொருள்படும். புள்ளி = எல்லை. ஹிமஸ் சேது பரியந்தம் என்னும் வழக்கு இங்கு கருதத்தக்கது.

இனி, வேளைவென்ற முகத்தியர் என்றதற்கு மன்மதனைத்தமது முகத்தழகால் மயங்கும்படி வென்றமகளிரெனப்பொருள்படும். இதனை

> "மணிமேகலைதன் மதிமுகந் தன்னுள்
> அணிதிகழ் நீலத் தாய்மலரொட்டிய
> கடைமணி யுகுநீர் கண்டனனாயிற்
> படையிட்டு நடுங்குங்காமன்; பாவையை
> ஆடவர் கண்டா லகறலுமுண்டோ"

என்னும் மணிமேகலை யானுமுணர்க. அன்றியும் புருடரைமயக்குதற் றொழிலில் மன்மதனைவென்ற (மன்மதனிலும்வலிய) முகத்தழகுடையமகளிர் எனவும் பொருள்கொள்ளலாம். என்பது தலைவனாகிய காமனிலும் அவனுடைய படைகளாகிய மகளிர் வலியரென்றபடி. இன்னும் வாயுபுத்திரன் என்பதற்கு ஐம்மாவின் மகனெனக் கூறல்போல வேளை = போது அதாவது மலர்எனக்கொண்டு மலரைவென்ற

முகத்தியர் எனக்கூறலும் ஏற்கும். வேலேவென்ற விழிச்சியர் என்றும் பாடம்.

மசாதமனையவர் என்றதற்குப் பேய்த்தேரை (கானலை) யொத்த அரக்கர் அதாவது கானல்செய் மைக்கண் நீர்போலக் காணப்பட்டுப் பிறகு மறைந்துபோவதுபோல அரக்கரும் மாயையால் ஏதாவது ஒரு உருக்கொண்டு தோன்றிப்பிறகு மறையுந் தன்மையரென்றுபொருள். மசாதம்=பேய்த்தேர். அன்றியும் மசாதம்என்பதைச் சாதமல்லாதது அதாவதுப் பொய்யெனக்கொண்டு பொய்நிலையாமல் அழிந்துபோவதுபோல் அழியுந் தன்மையை யுடையவர் என்றுதல், மசாதம்+மனையவர் எனப் பிரித்துப்பொய்க்கு இருப்பிடமா யுள்ளவர் என்றுதல் பொருள் கொள்ளவுங்கூடும்.

இனிக் கும்பகர்ணன் கொலையுண்டதைக் கேட்டராவணன் கோபத்தால் தன்சபையில் உள்ள வீரர் பலரையும் இகழ்ந்துபேச, அவ்விகழ்ச்சி மொழிகளைப் பொருத அதிகாயனுக்கு உண்டாகியமானத்தை இங்கு நதிகாய் நெடுமானமெனக் கூறியிருத்தலால் நதிகாய் நெடுமானம் என்றதற்கு நதியைவென்ற நெடுமானமெனக்கொண்டு ஆறு உற்பத்தியிற் சிறிதாய்க் காணப்பட்டுப் போகப்போகப் பெரிதாய் நீண்டுகொண்டே போவதுபோல, மானமுந்தோன்றியபொழுது சிறிதாய்த் தோன்றி வரவர அதிகப்பட்டுக்கொண்டே யிருந்தது என்றுபொருள் கூறலாம்; என்றாலும் நதியென்பதற்கு வடமொழியில் வணக்கமென்றும் பொருள் இருத்தலால் இங்கு வணக்கத்தைக் காய்ந்த நெடுமானமெனப் பொருள் கொள்வது தகும். என்னை?

> "இவற்றும் மாண்பிறந்த மானமு மாறு
> வுவகையு மேத மிறைக்கு" என்ற திருக்குறளுரையிற்

பரிமேலழகர் மாண்பிறந்த மானமென்பதற்கு அந்தணர் சான்றோர் அருந்தவத்தோர் தம்முன்னோர் தந்தை தாய் என்றிவரை வணங்காமையும், முடிக்கப்படாதாயினும் கருதியது முடித்தேவிடுதலும் முதலாயினவெனக் கூறி, அத்தகைய மானங் கூடாதென விலக்கி யிருத்தலால், இங்கு அதிகாயன் தன்தந்தையாகிய ராவணனிடத்தில் வணக்கமின்றி வைதுரைத்தல் கூடாது; அங்ஙனமிருக்கவும் ராவணன் கூறிய கடுமொழிகளை வீரனாகிய தனக்குக் கேட்டுப் பொறுக்கக் கூடாமையால் வரம்புகடந்து மிகுந்த மானமும் நாணுமுண்டாக அதனால் அதிகாயன் வைதுரைத்தான் என்று பொருள்பட்டு அவனுக்குண்டாகிய மானத்தின் மிகுதியைக் காட்டுதலினென்க

(இன்னும்வரும்.)

சுசுப்பிரமணிய ஐயர்,
தமிழ்ப்பண்டிதர், ஐஸ்கூல், ஸ்ரீரங்கம்.

# மனோகரன்.

(208-ம் பக்கத் தொடர்ச்சி.)

நம்மதுகதை தஞ்சாவூரிலும் அதனருகாமையிலும் இங்கிலாந்தில் எலிசபேத் மகாராணியார் ஆண்டபொழுதும் இந்தியாவில் ஆக்பர் மகா சக்கிரவர்த்தியாண்டபொழுதும் நடந்தது. அந்தக் காலத்தில் இந்தியாவின் வடபாகத்தில் சக்கிரவர்த்தியின் அதிகாரத்தால்மிகவும் நீதிநடந்துவந்தது. ஆனால் தெக்ஷிணதேசத்திலோ அவ்வளவு நீதி நடக்கவில்லை. சிற்றரசர்கள் அடிக்கடி கலகம் செய்து வந்தார்கள். திருடர்களின்உபத்திரவம் அதிகமாயிருந்தது. இந்தச்சமயத்தில்தஞ்சாவூரில் மோஹனதாஸ் வீட்டில் லக்ஷ்மிபாய் என்னும் ஓர் சிறுமியும் ஒரு இளங்காளையும் ஏதோ பேசிக்கொண்டிருந்தார்கள் இது தகுமோவெனில், பால்யமுதலன்னியோன்னியமாய் வளர்ந்து வந்தவர்கள். இருவரும் சகோதரபாவம் கொண்டாடுவார்கள். அவர்களிருவருக்கும் சிறிதும் வித்தியாசம் இடையாது மிகவும் அழகு வாய்ந்தவர்கள். ஓருயிரும் ஈருடலும்போல் இணைபிரியாதிருந்தார்கள்.

வசந்தகாலத்துமாலையாதலால் லக்ஷ்மிபாய் இடையில் ஓர்சன்னமான பாவாடையுடுத்தி மேல் ஓர் சரிகைச் சல்லாவைத் தாவணியாக அணிந்திருந்தாள், அவள் வனப்பை என்னென்று கூறுவோம்; செந்தாமரையையொத்த வதனத்தில் நீலோற்பலம்போன்ற இருநேத்திரங்களும், எள்ளுப்பூவைப்போன்ற நாஸிகமும், பிறைச்சந்திரனை நிகர்க்கும் லலாடமும், கார்மேகத்தையொத்த கூந்தலும், கிண்ணம் பதித்ததுபோன்ற விசாலமான மார்பும், நுண்ணிய இடையும், வாழைத்தண்டை ஒக்கும் தொடையையும் உடையவளாய் மாடியில் தனது நண்பனுடன்பேசிக்கொண்டு உலாத்தும்பொழுது; தடாகங்களினின்றும் ஹம்ஸங்கள் மூழ்கிமூழ்கிக் கிளம்புவதுபோல் அவளது பாதங்கள் இடையிடையே வெளிப்பட்டன.

இவளது இயற்கையழகுதான் இவ்வளவென்றால் அத்துடன் சேர்ந்த அவளது செயற்கையழகை யாரோ வருணிக்கவல்லார். இந்த நாரீரத்னம் நக்ஷத்திர ஜோதியைப்போன்ற இருகம்மல்களைக் காதில் திருகியிருந்தாள். கண்டத்தில் வைரத்தாலிழைத்த ஒரு அட்டிகையும் நேர்த்தியான சிறந்த நல்முத்தாலாகிய ஓர் ஹாரத்தையும் தரித்திருந்தாள். நீலத்தாலும் வைடூரியத்தாலுமாகிய வளையல்கள் ஹஸ்தங்களை அலங்கரித்தது, இடையில் ஸ்வர்ணத்தாலாகிய ஒட்டியாணமென்னும் ரக்ஷாபந்தனம் நவரத்னங்களால் ஆகிய முகப்புடன் ஜ்வலித்தது. விரல்களில் விதவிதமோதிரங்கள் பிரகாசித்தது. இத்தகைய வனப்புடைய மங்கையர்களை ஸ்திரீகளே கண்டு மையலுருவாரெனில் இந்த சுந்தரவதனன் காமுறுதிருப்பனோ? என்கூடாது! அவர்களிருவரும் பால்ய சினேகிதர்கள். அவர்களுக்குள்ள வித்தியாசத்தை ஈசனும்அவர்களை வளர்த்துவந்தபெற்றோரும்அறிவரே யல்லது,பிறர் யார்? அறியவல்லார்

ஆனால் அவர்கள் மனப்பூரணமாய் சகோதரபாவம் கொண்டாடுகிறார்கள். இது விந்தையினும் விந்தையே! இவர்கள் பிறப்பு வளர்ப்பைப் பின் கூறுவோம்.

இவர்கள் மாடியில் உலாவி வரும்பொழுது யாது வசனித்தார்களோ! நாமறிகிலோம். ஆனால் அந்தப்பெண்மணி தனதினியகுரலுடன் பாடியபொழுது மிகவும் இன்பத்தை யடைந்தான். குயிலையும் தோற்கடிக்கும் குரலுடையாள். இவளது கண்டத்தொனியைக் கேட்பவர்கள் சிரவணாநந்தமடைவார்கள். அவள்பாடினதென்னவென்றால்

திருமாலை — ஸஹானாராகம்.

பச்சைமா மலைபோல் மேனி பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா அமரரேறே ஆயர்தம் கொழுந்தே யென்னும்
இச்சுவை தவிர யான்போ யிந்திர லோகமாளும்
அச்சுவை பெறினும் வேண்டே னரங்கமா நகருளானே.
*வேதநூல் பிராயம் நூறு மனிசர்தாம் புகுவரேனும்
பாதியு முறங்கிப்போகும் நின்றதில் பதினையாண்டு
பேதைபா லகன தாகும் பிணிபசி மூப்புத் துன்பம்
ஆதலால் பிறவிவேண்டே னரங்கமா நகருளானே.
பெண்டிரால் சுகங்களுய்ப்பான் பெரியதோ ரிடும்பைபூண்டு
உண்டிராக் கிடக்கும்போது உடலுக்கே கரைந்து நைந்து
தண்டுழாய் மாலைமார்பன் தமர்களாய்ப் பாடியாடி
தொண்டுபூண் டமுதமுண்ணாத் தொழும்பர்சோ றுகக்குமாறே
குளித்துமூன் றனலையோம்பும் குறிகொளந் தணமைதன்னை
ஒளித்திட்டே னென்கணில்லை நின்கணும் பத்தனல்லேன்
களித்தென கொண்டுநம்பி கடல்வண்ணா கதறுகின்றேன்
அளித்தெனக் கருள்செய் கண்டாய் அரங்கமா நகருளானே.
ஊரிலேன் காணியில்லை உறவுமற் றொருவரில்லை
பாரில்நின் பாதமூலம் பற்றினேன் பரமமூர்த்தி
காரொளி வண்ணனே கண்ணனே கதறுகின்றேன்
ஆருளர் களைகணம்மா அரங்கமா நகருளானே.
தவத்துளார் தம்மிலல்லேன் தனம்படைத் தாரிலல்லேன்
உவர்த்தநீர் போலவென்ற னுற்றவர்க் கொன்றுமல்லேன்
துவர்த்தசெவ் வாயினார்க்கே துவக்கறத் துரிசனானேன்
அவத்தமே பிறவிதந்தா யரங்கமா நகருள்ளானே.

என உருக்கமாய்ப் பாடினாள்.

இதைக்கேட்ட சுந்தரன் மிகவும் அகமகிழ்ந்து தானும் பாடலானான்.

கந்துக மதக்கரியை வசமா நடத்தலாம்
கரடிவெம் புலிவாயையும்
கட்டலா மொருசிங்க முதுகின்மேற் கொள்ளலாம்
கட்செவி எடுத்தாட்டலாம்

வெந்தழலில் இரதம்வைத் தைந்துலோ ஹத்தையும்
  வேதித்து விற்றுண்ணலாம்
வேறொருவர் காணாமல் உலகத் துலாவலாம்
  விண்ணவரை ஏவல்கொள்ளலாம்
சந்ததமும் இளமையோ டிருக்கலாம் மற்றொரு
  சரீரத்தி னும்புகுதலாம்
ஜலமேல் நடக்கலாம் கனல்மே லிருக்கலாம்
  தன்நிகரில் சித்திபெறலாம்
சிந்தையை அடக்கியே சும்மா விருக்கின்ற
  திறமரிது சத்தாகியென்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
  தேஜோமயானந்தமே!

எனத் தாயுமானவர்பாட்டை வெகுகருத்துடன் தாளம்விடாமல் பாடினான். அநேகமாய் இருவர் குரலும் ஒத்திருந்த தென்னலாம். ஏனெனில் இருவரும் ஒரே குருவினிடத்தில் பயின்று வந்தவர்கள். இருவரும் சூட்சமபுத்தியுள்ளவர்கள் இதுகாறும் யாம்கூறிவந்தபால யன் நமது கதாநாயகனென யாவரும் அறிவார்கள்.

மோஹனதாஸ் யாம்கூறியஉத்தியோகஸ்தரே. இவரதுவீட்டில் தான் மனோகரன்வளர்ந்துவந்தான். இவரதுநாயகியாம் மாதுநல்லாள் ஸ்ரீமதுகமலாபாய் பக்ஷபாதமின்றி இருகுழந்தைகளையும் ஒரேசீராய் வளர்த்துவந்தாள். அவர்களுக்கு கமலாபாய் ஆறுமாத கர்ப்பிணியா யிருக்கையில் மனோகரன் கிடைத்தான் அவனை அன்புடன் ஆதரித்து வந்தார்கள். பத்துமாதங்கழிந்தவுடன் பாலச்சந்திரனையொத்த இந்த நாரீமணி யுதித்தாள். லக்ஷ்மிபாய் வயதிலும் புத்தியிலும் தினே தினே விருத்தியடைந்தாள். அவளுக்கு இப்பொழுது ஒன்பதுவயது ஆகிறது. மனோகரனுக்குப்பனிரண்டாகிறது. இருவரும்ஒருவரையொருவர் சகோதரராகவே பாவித்துவந்தார்கள். கமலாபாய் அம்மாளுக்கோ இவர்களது பாலப்பருவத்திலேயே மணமுடித்து அந்தமகோற்சவத்தைக் கண்குளிரப் பார்க்கவேண்டுமென மிகவும் ஆவலுண்டு.

ஆனால் அவளது புருஷனோ அதற்கிணங்கவில்லை. ஏனெனில் பால்யத்தில் விவாகம்செய்வதால் அநேகர் நாசமடைவதை அவர்கண் காணப் பார்த்திருக்கிறார். அவருக்கு மனதிற்குள் இச்சையிருந்தாலும் வெளியிடுவதில்லை. இந்தச் சமயத்தில் கமலாபாய் அம்மாளுக்கு தேகம் வரவர மெலிந்தது ஏதோ ஆர்கணுக்கள் கண்டுகொண்டே வந்தாள் கூடியசீக்கிரத்தில் இம்மண்ணுலகை விட்டு நீங்குவள் போலத் தோன்றிற்று. அவள் தன்கணவனை ஒருநாள் தனிமையி லழைத்துப் பின்வருமாறு கூறலுற்றாள்:—

(தொடரும்.)

V. Naganathan.

## தமிழ்மறையநாதித்வம்.

(165-ம் பக்கத் தொடர்ச்சி.)

21+30=51 அட்சரம்

12. மேற்காட்டியவாறு, இத்திவ்விய வேதாகம விளக்கமாகிய வித்திவ்விய திருமந்திரம் 'தேவாரம்' திருவாசகம் முதலிய ஒன்பது திருமுறைகளுக்கும் அனேகாயிர வருடங்களுக்கு முன்னமே பூலோகத்தில் வெளியாயும், காலபேதத்தாலும், இராஜாங்க பேதத்தாலும், பரவாமல் மறைந்த 'தமிழ்மறை' யாகவேயிருந்துவந்தது மேற்கூறிய திருவாவடுதுறை யென்னுந் திவ்விய சிவக்ஷேத்திரத்திற்கு ஸ்ரீ திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் எழுந்தருளியுற்றகாலத்தில் 'தமிழ்' மணக்கிறதாக அந்தச்சுவாமிகள்மலர்ந்தருளி அச்சேத்திரத்தில்வைப்பாகஒருபெட்டகத்திலிருந்ததை வெளிப்படுத்தியதாகவும் கர்ணபரம்பரையாகக் கூறப்படுகின்றது. இக்காரணத்தினாலோ, வேறு எக்காரணத்தினாலோ இத்'திருமந்திர'த்தைப் பத்தாந் திருமுறையாக வகுத்திருக்கின்றார்கள். ஏனைய எல்லாத்திருமுறைகளுக்கும் இது அதிபூர்வமுடையதாயிருப்பதோடுங்கூட எல்லாவற்றிற்கு மூலாதாரத் 'தமிழ் மறை'யாகவும் இருக்கின்றது கண்டீர்.

13. இவ்வாறு அநாதியாயுள்ள அதாவது சூரியாதிகாலதத்துவசிருட்டியுண்டாகாத நிலையிலுள்ள 'தமிழ்மறை'யானது மேற்கூறியவாறே உற்றசிவனாரால் பராசத்திக்கு வெளியாக, பராசத்தியால் நம்நந்திதேவருக்கு வெளியாக நந்நந்திதேவரால் 'நம்பிரான்' திருமூலதேவருக்கு வெளியாக நந்திருமூலதேவரால் றஹஞணைப்படி யிப்பூவுலகத்துக்கு வெளியாயிற்று.

14. இவ்வாறு 'தமிழ்மறை' யநாதித்துவத்தைப்பற்றி 'ஆகும அநாதிகலையாகமவேதம்' என்ற 'திருமந்திர'த்தின் கருத்துக் கிணங்க இக்காலம் வெளிப்பட்டுள்ள ஆகமங்களிலிருந்து தக்க ஆதாரங்களையும் தகவல்களையும் என்னருமை நண்பராகிய விருதை ஸ்ரீ சிவஞான யோகியார் 1910-ஆம் டிசம்பர்-மீ த்தில் இராமநாதபுரத்தில் கூடிய 5-வது 'சைவசித்தாந்தமஹாசமாஜத்தில்' எடுத்துக்காட்டிய அருமைப் பாட்டை யனேகரறிந்திருக்கலாம். 'தமிழ்மறை' கானம் அநாதியாய் நம்பராநந்தி சந்நிதிகளில் செய்யப்பட்டு வந்திருப்பதற்கும் ஆதாரம் தற்காலம் வெளிப்பட்ட ஆகமத்திற் கூறுவதாகவும் மேற்கோள்எடுத்துக்காட்டினார்கள்.

15. ஆகவே நமக்குத் 'திருமந்திரமே' ஆரியருக்கு முன்னிட்டிருந்த பரிசுத்த (கலப்பில்லாத மறுவுறாத) வேதங்கள் ஆகமங்கள் எண்ணிறந் துற்றனவைபின் சாரமாயுள்ள 'அநாதிகலையாகமவேதம்' எனக்கண்டோம். "ஆகும் அநாதிகலை யாகமவேதம், ஆகுமத்தந்திர

மந்நூல்வழிநிற்றல்; ஆகுமனாதி யுடலல்லாமந்திரம், ஆகுஞ்சிவயோ தக முபம்தசமே''

இதுபற்றியே 'ஆதிசைவர்' என்னும் சிவமறையோர்களுக்குள்ளும் ஏனையபரம்பரை கங்கைகுலச் சைவர்களுக்குள்ளும் மந்திரகுரு, தந்திரகுரு, சமயகுரு, திட்சாகுரு முதலிய சகலவிதஆசாரியரும் ஏற்பட்டு கிரியானுட்டானங்கள் நூதனமாய் படையெடுத்துவந்த ஆரியர் சம்பந்தமின்றியே தொன்றுதொட்டு நடைபெற்று வந்துள்ளனவாம். ஆனல் காலபேதத்தாலும் இராஜாங்கபேதத்தாலும் கொங்குமுதலிய பலஇடங்களில் ஆதிசைவசிவமறையோர்கள் ஆரியவேதானுட்டானம் பற்றி நிற்பதும், கங்கைகுலச் சைவர்கள் 'ஆரிய'குருவைக்கொண்டு கிரியானுட்டானஞ்செய்து செய்துசைவத்தன்மையும் சைவவாழ்வுங் கொள்கையும் குன்றி யீனத்திதியடைந்து வருவதும் வழக்கமாயிருக்கின்றது. இதுகாலபேதக் கன்மப்பீடையேயன்றி வேறன்று.

## சைவசித்தாந்தசாதனம் நெ. ௩.

### 'சிவநாமங்கள்.'

(சென்னையிற்கூடிய 1911-வருடம் ஆண்டின் சைவசித்தாந்த மஹா சமாஜத்திற் பிரசங்கம் செய்தது.)

அன்பர்களே,

1. தனிநிருபத்தில் அச்சிட்டு நான் வெளியிட்ட க-வது நம்பர் சாதனத்தில் 'பஞ்சக்கிருத்தியம்' எல்லாருக்கும் பொது, அதற்குறிய அக்கினிகாரியம் எல்லாருக்கும்பொது, அக்கினிகாரிய சுதந்தரமுடைய 'எரியுருவன்' (முக்கண்ணன், சடையாடி, தீயாடி) எல்லாருக்கும் பொதுவான முழுமுதற்கடவுளென்றும் வெளியிட்டேன்.

2. இரண்டாம் நெம்பர் சாதனத்தில் 'மூர்த்தி' அதாவது அம் முழுமுதற்கடவுளின் (எரியுருவன்றன்) மிகுதுவில்தோன்றும் ஐவை ந்துநிலைகள் **மூர்த்தங்கள்** அப்பஞ்சகிருத்தியோபகாரசோபானவிளக்கமென்னும் அச்சோபான வுபகாரம் சிவகோடிகளாகிய நம்மையுத் தேசித்தே யேற்பட்டதென்றும் இவ்வையைந்து சோபானக்கருணைப் பிரவாகநிலைகள் எச்சமயத்தாரும் அடைந்துவரும் அவ்வவ்வமைய பக்குவமென்றும் ஆனதால் எச்சமயத்தாருக்கும் பொதுவானவைகளென்றும் இராமநாதபுரம் மஹாசபையில் (௫-வதுசபையில்) வெளியிட்டேன்.

3. இப்போது 'அம்முழுமுதற்கடவுளின்' திருநாமங்களைபற்றி விசாரிப்போம்.

4. மூலாருளான் மூவேழ்மூப் பதுவாகும்;
மூலாருளான் முணுமவை மூலமே
மூலாருளான் முனுமவை வந்தது
மூலாருளானே முன்வந்து நிற்குமே.

(இன்னும்வரும்) உ-ற்ற. ஷண்முகமுதலியார்.
சைவசித்தாந்தி.

## ஒருவேண்டுகோள்.

வெளியூர்களிலிருந்துவந்து திருச்சியில் கல்வி பயிலும் பிராமண மாணவர்களுக்கும், கிறிஸ்தவமாணவர்களுக்கும் சௌகரியமானபோசனசாலைகள், அவ்வக்கலாசாலை நிர்வாகிகளால் ஏற்படுத்தப் பட்டுள்ளன. பிராமணரல்லாத இந்துமாணவர்களுக்கு இவ்விதமான சௌகரியமொன்றுங் கிடையாது. அவர்கள் போசனம் செய்யும்படியான தகுந்தநிலையிலுள்ள போசனசாலைகளும் இவ்வூரிற்கிடையா. பிராமணர்கள் வைத்திருக்கும் போசனசாலைகளில் சாப்பிடுவது நோய்க்கிடந்தருவதாய் இராநின்றது. பச்சரிசிச் சாதம் உண்ணப் பெரும்பாலார்க்குப் பழக்கம் இல்லை; அங்கே சரியான போஷணையும் வேறு சௌகரியங்களும் எண்ணெய் ஸ்நானம் முதலியனவும்கிடையா. பிராமணர்களுடைய போஜனசாலைகள் தனியாய்மாணாக்கர்களுக்கென்றே ஏற்படுத்தப் படவில்லையாதலால், அவ்விடங்களில் மாணாக்கர்களும் பொதுஜனங்களும் ஒன்றாய் மதிக்கப்படுகிறார்கள். போசன விஷயத்தில் மாணாக்கர்களுக்கு இவ்விதமான பெருங்குறை ஏற்பட்டுள்ளது. இக்குறையை நிவர்த்தியாதபோது, மாணாக்கர்கள் சுகமிழந்து சரியாய்க்கறக அசக்தர்களாகி விடுகிறார்கள்.

திருச்சியிலே, கல்வியும் செல்வமும் மிகுந்த பிராமணரல்லாத கனவான்கள் பலர் இருக்கிறார்கள். இவர்களில் யாவரேனும்முன்வந்து போசனசம்பந்தமான எல்லாவசதிகளுங் கிடைக்கும்படி, மாணவர்களுக்குத் தனியாக போசனசாலை ஏற்படுத்தினால் அவர் பெரும்புண்ணியம் செய்தவர் ஆவர். போசனசாலை தெப்பக்குளத்திற்குச் சமீபமாயிருத்தல்வேண்டும்; சமையற்காரர்கள் பிராமணர்களாயிருத்தல் வேண்டுவதில்லை. இவ்விஷயத்தை மேற்கொண்டு செய்பவர், ஒருபேருபகாரியாகக்கருதப்படுவர்; அவர் மாணாக்கர்களுடைய கல்வியையே அபிவிர்த்தி செய்தவராய், அவர்களால் நன்றிபாராட்டற் குரியர்.

பரிதாபி.

## விநோதக்கூற்று.

ஒருநாள் ஒருஉபாத்தியாயர் வகுப்பிலுள்ள ஒருபையனைப்பார்த்து, "அடே, இமயமலை எங்கே இருக்கிறது சொல்" என்றார். அதற்குப்பையன் இடி இடி என்று சிரித்தான். உடனே ஆசிரியர் சினங்கொண்டு 'எதற்காகவடா சிரிக்கிறாய்' என்றார். அதற்குப் பையன், "வேறொன்றுக்காகவுமில்லை, தங்களுக்கு இவ்வளவுவயதாகியும் பி.ஏ. எல். டி முதலிய பரிசைஷகளெல்லாம் தேர்ச்சியடைந்தும் இமயமலை இருக்கிற இடமின்னதென்று தெரியாமல் என்னைக் கேட்கிறீர்களே என்றுநினைக்கும்போது என்னையறியாமலே சிரிப்பு வந்துவிட்டது" என்றான்.

2. தாயார்.—"ஏண்டா, குழந்தை! உன் தங்கையின் ஞாபகமேயில்லாமல் தானே நீ பக்ஷணங்களையெல்லாம் சாப்பிட்டுவிட்டாய்?"

குழந்தை:— "சாப்பிடும்போதெல்லாம் தங்கை ஞாபகந்தான். எங்கே மத்தியில் வந்துவிடப்போகிறாளோவென்று எண்ணிக்கொண்டேதானே சாப்பிட்டேன்"

3. ஜேயில்வேடிக்கை பார்ப்பவர்— "நீ இங்கு இருப்பதற்கு என்னகாரணம்?"

கைதி:—"விருப்பந்தான் காரணம்"

வேடிக்கைபார்ப்பவர்:—"எவ்விதம்? விவரமாய்ச்சொல்லு"

கைதி:—"நான் ஒருவனுடைய கடியாரத்தில் விருப்பங்கொண்டேன். நான் அதை வைத்துக்கொண்டிருப்பதில் அவனுக்கு விருப்பமில்லை. நியாயாதிபதி நான் இந்தஇடத்தில் ஐந்துவருஷம்வரையிருக்கும்படி விருப்பங்கொண்டுவிட்டார்."

## மாணிக்கஜோதி

(189-ம் பக்கத் தொடர்ச்சி.)

சிறிது தெளிவுபடுத்திக்கொண்டு ஐயாவாருங்கள்சிங்காரவேலு முதலியாரா என்றேன். ஆம் ஐயா! நான் சிங்காரவேலுதான் என்றார். வண்டிக்குளுருண்டு வெளிவந்ததை இவருமறிந்திருப்பாரோ என்று நினைத்தேன். அதற்குள் அவர் என்னை நோக்கி மிகக்கஷ்டப்பட்டவர் போல் காணப்படுகிறீரே என்ன விசேஷம் என்றார்? இவர் இக்கேள்வியைக்கேட்டவுடன் அவர்முகத்தை யுற்றுப்பார்த்தேன். அன்றுசித்திரைமாதத்துப்பௌர்ணமிவெள்ளிக்கிழமையாதலால் பூரணச்சந்திரன் பால்போற் பிரகாசித்துக் கொண்டிருந்தது, என்றாலும் மரங்கள் பாதையின் இருபுறத்தும் ஓங்கிவளர்ந்து சவிந்திருந்தபடியால்இருள்

சூழ்ந்திருந்தது. மரக்கிளைகளின்ஊடேஉள்ள இடைவழியாகக்கொஞ் சம்கொஞ்சம் நிலவின்பிரகாசமும் பிரகாசித்துக்கொண்டிருந்தது அந் தப்பிரகாசத்தால் சிங்காரவேலு முதலியாரின் முகத்தை யுற்றுநோக் கிய எனக்கு அவர் நான் உருண்டு புரண்டு எழுந்ததை நன்றாயறிந்து கேலியாகக் கேட்கிறாரென்பதை நானும் நன்றாய் உணர்ந்துகொண் டேன் அவர்க்கு நான் இனிஎன்ன பதில்சொல்வேன்? இனி மறைக் கலாமா? ஐயாநண்பரே சித்திரையாதப் பௌர்ணமி வெள்ளிக்கிழமை யாயிருப்பதால் ஈஸ்வரியைத் தரிசிக்கலாமென்று வந்தேன் வழியில் வண்டியிற்பூட்டியிருந்த குதிரை யறுத்துக்கொண்டு வண்டியைத்தள் ளிவிட்டு ஓடிப்போய்விட்டது அதிலிருந்த நானும் மற்றவரும் கீழே விழவும் கஷ்டப்படவும் நேர்ந்தது என்றேன். அதற்கவர் ரெங்கநாய கியைப்பார்க்கச் சீரங்கம்போகாமல் ஈஸ்வரியைப்பார்க்கத் திருவானைக் காவலுக்குப் போனதால் இப்படி நேர்ந்ததுபோலும் என்றுசொல்லிச் சிரித்து ஐய குமாரசாமி முதலியாரே இன்னும் என்னிடத்திலேயே உம்முடைய சாமார்த்தியத்தையெல்லாம காட்டுகிறீரே நான்உம்மை நன்றாயறிவேன் நீர்நம்மை நன்றாயறியீர் என்றார். பிறகும் இவரிடத் தில் என்னஒளிப்பதென்று 'ஒருபுதுமைகாணப் புறப்பட்டேன்' என் றேன். அதற்கவர் நீர் புதுமைகாணப் புறப்பட்டீரென்று அறிந்துதான் உம்மைக்காண நான்புறப்பட்டேன். அது இருக்கட்டும் வண்டியில்உம் மோடு உருண்டு சீரங்கம் வைத்தியசாலைக்குப்போன அந்தப்பெண்ணை யேன்தொடராதுவிட்டீர் என்று கேலியாகக் கேட்டார் நான் அதற்கு ஒன்றும் பதில் சொல்லவில்லை. அவர் ஐயா குமாரசாமிமுதலியாரே நீர் அதைத் தொடர்ந்து போயிருப்பீரேயானால் புதுமையினும் புதுமை கண்டிருப்பீர், ஆயினும் பாதகமில்லை இப்புதுமையை முதலிற்கண்டு பிறகு அந்தப் புதுமையினும் புதுமையைக் காணலாம் என்றுசொல்லி என்னைத்தொடர்ந்தார் நானும் அவருமாக திருவானைக்காவல் போய்ச் சேர்ந்தோம்.

முதல் அத்தியாயம் முற்றிற்று.

## இரண்டாவது அத்தியாயம்.

எண்ணிறந்த தாயர்வயிற் றிருந்துபிறந் திடுந்துயர மெனைத்துநீங்க
மண்ணிறந்து புனலிறந்து வயங்கியசெந் தீயிறந்து வளியினோடு
விண்ணிறந்து பெருங்கருணைத் தாயாகித் தனதகட்டின் விரவவைத்துக்
கண்ணிறைந்த கவின்காட்டு மகிலாண்ட நாயகியைக் கருத்துள் வைப் [பாம்.
(திருவானைக்காப் புராணம்.)

இனி, பெட்டி வண்டியிற் சென்ற பெருமான் பெருமாட்டிகளைப் பற்றிச் சிறிது கவனிப்பாம். இப்பெட்டிவண்டி மலட்டாற்றண்டை,

வருமுன்னரே பலஅர்ந்தணர்வந்து சூழ்ந்துகொண்டு அர்ச்சனையுண்டா வென்று கேட்கத் தலைப்பட்டனர். சிலர் திருவானைக்காவலி லெழுந்தருளியிருக்கும் அகிலாண்டநாயகி மகத்துவத்தையும் சம்புநாதரின் பெருமையையும் கோயிலின் பழமையையும் க்ஷேத்திரத்தின் பூர்வத்தையும் பிரசங்கிக்கத் தொடங்கிவிட்டனர். உள்ளிருந்த பெருமாளும் பெருமாட்டியும் சிறிது கேட்டும் பிறகு தமது யோசனைகளை யோசித்துக்கொண்டும் சுற்றுள்ள வேடிக்கைகளைக் கவனித்துக்கொண்டும் இருந்தார்கள். அதற்குள் வண்டி திருவானைக்காவல் கோயிலுக்குச் சமீபித்துவிட்டது. ஜனநெருக்கமானதால் வண்டி விடச் சாத்தியப்படவில்லை அப்படியா விடமுயன்றாலும் போலீசார் விட இடங்கொடுக்கவில்லை வண்டிக்காரனும் வண்டியை நிறுத்திவிட்டான். வண்டியைச் சூழ்ந்து இவர்களை உள்ளே அழைத்துக் கொண்டுபோய் அர்ச்சனை செய்விக்கச்செய்து கூலிவாங்கவேண்டுமென்று காவிரியாற்றுப்பாலத்திலேயே இவர்கள்மேல் கண்குறியிட்டுத் தொடர்ந்துவந்துமலட்டாற்றுப்பாலத்திலிருந்து இவர்களை மன்றாடிக்கொண்டும் கெஞ்சிக்கொண்டும் புராணங் கூறிக்கொண்டும் வரும் அந்தணர்கள் நான்கூட்டிப்போவேன் நான்கூட்டிப்போவேன் நான்கூட்டிப்போவேன் என ஒருவரை ஒருவர் இடித்துக்கொண்டுமுன்னுக்குவந்து பெட்டிவண்டியைத்திறந்துள்ளிருந்தவரை ஒவ்வொருவரும் கையைப் பிடித்திழுக்கப் புறப்பட்டுவிட்டார்கள். இவர் பாடு திண்டாட்டத்தில் வந்துவிட்டது. எல்லாரும் ஆளுக்கொருபக்கமாக கையைப்பிடித்திழுத்தால் என்னதான் செய்வார். திமிறிஉதரிக்கொண்டுபோகவும் முயற்சித்தார். இவருக்கு அதற்கு வன்மை போதாது போயிற்று. பக்கத்திலிருந்த அம்மாள் பெண்பிள்ளையாயிருந்தபடியால் தப்பினார்கள், இல்லாவிட்டால்கையை பிடித்துக்கொண்டே போயிருப்பார்கள்.

சிலர் நான் கோட்டையிலிருந்து உங்களைத்தொடர்ந்து வருகின்றேனென்றனர். சிலர் நான் பிள்ளையவானைக் காவிரியாற்றிலிருந்து தொடர்ந்துவருகின்றேனென்றனர் சிலர் முதலியார்வாளை உறையூர் முதலியாரவாள் வீட்டிலிருந்து தொடர்ந்து வருகின்றே னென்றனர். சிலர் பிரபுவை மலட்டாற்றிலிருந்து வண்டியோடே தொடர்ந்து வருகின்றேனே யென்றனர், சிலர் நாதாவென்று தெரிந்தல்லோ ஸ்தல மகத்துவ மெல்லாம் சொல்லிக்கொண்டு தொடர்ந்து வருகின்றேனே யென்றனர். சிலர் அவர்காதில்மட்டும் விழும்படி இரகசியமாக அந்தப் பிராமணன் அசட்டுப்பிராமணன் சும்மா என்னோடுகூட வாருங்கள் என்றனர். சிலர் அந்தப்பிராமணன் வேசிவீட்டில் சாப்பிட்டுக்கொண்டிருக்கின்றான் என்னோடு வாருங்கள் என்றனர். சிலர் * * * * * 0 என்னோடுகூட வாருங்கள் என்றனர். இப்படி அவர்கள் இரகசியமாக ஒருவரையொருவர் வண்டியில்வந்த பிரபுவிடத்தில் சொல்லப்புகுந்தது அங்குள்ள மற்றவர்களுக்குக் கேளாமற்போகவுமில்லை அங்

சூழ்ந்த ஒவ்வொரு பிராமணர்கள் மேலும் ஒவ்வொரு தோஷமே கற்பிக்கப்பட்டாயிற்று விபசாரக்குற்றம் குடியன் என்னும் குற்றம் புலாலுண்பேன் என்னும் குற்றம் திருடன் என்னும் குற்றம் முதலிய குற்றங்களை ஒருத்தன்மேல் ஒருத்தனுகக்கூறி எல்லோரும்தகுதியற்றவர்என்று சொல்லும்படி தமக்குத்தாமே அவ்வந்தணர் கூறிக்கொண்டனர். இதற்குள் அவ்வந்தணருக்குள்ளேயே ஒருவருக்கொருவர் சண்டை உண்டாயிற்று அந்தணர்கள் ஒருவருக்கொருவர் சண்டையிடத்தொடங்கினுல் அடிதடி யேது சத்தம் தானே பலமாயிருக்கும். இவர்கள் செய்த சப்தத்தில் போவோரும் வருவோரும் பெருங்கூட்டமாகக் கூடிவிட்டனர் இந்த சந்தடியிற் றப்பினேமென்று வண்டியில் வந்த பிரபு வெளிவந்துவிட்டார், தனது கூடவந்த தன் மனைவியைப் பார்த்தார் காணவில்லை.

(இன்னும்வரும்.) கதாப்பிரியன்.

## ஓர் ஆகாயப் பிரையாணி,

(213-ம் பக்கத் தொடர்ச்சி.)

[ராபர்ட் துரையுடன் யாரோ ஒருவன் பலவந்தமாக ஓடிவந்து யாத்திரைத் தோழனுனேனென்று சொன்னேமல்லவா, அவன் மெரினு என்னும் கப்பலின் கூலிவேலைக்காரன். அவன்பெயர் மூர் அவன்புத்தி மாராட்டமாகிக் கப்பலில் உள்ளவர்களை தொந்திரவு செய்ததினுல் சென்னை வெரியின் ஆஸ்பத்திரிக்கு 1911-வூ மார்ச்சு-மீ 8-உ கொண்டுவரப்பட்டு சிகிச்சையில் இருந்தான் 1911-வூ மே-மீ 11-உ மாலை எவ்வாறோ இவன் வெளிவந்துவிட்டனன்.]

[வாக்குவாதத்தொடர்ச்சி.]

(வெரியன்) அடே மூடா என்ன முணவுகிறுய் இனி ஏதேனும் வார்த்தைபேசினுல் தெரியுமா இதோ கத்தியைப்பார் என்று கத்தியினுல் குத்தவந்தான்.

(நான்) இதற்குக் காரணம் நாமல்லவோ? இது நமது தலைவிதியேயாகும் மண் குதிரையை நம்பி ஆற்றிலிரங்கினுற் போலானதே. கேடுவரும்பின்னே மதிகெட்டுவருமுன்னே என்பதுவெளியாயிற்றே; ஓகடவுளே! தாமரையிலைமேல் ஜலம் தத்தளிப்பது போல் என் மனம் தத்தளிக்கின்றனவே இதுவும் உன் இஷ்டமோ? இவ்வெரி ... ...

(வெரியன்) அடேசீட்டு விளையாடலாம்வா என்னபேசுகிறுய்.

[சுமார் மாலை 6-மணியிருக்கும் சென்னையில் ஜனங்களெல்லோரும் வெரியன்போய்விட்டான் வெரியன் போய்விட்டான் ஐயோ பாவம் எங்கே போய்விட்டார்களோ என்று எங்குபார்த்தாலும் இதுவே வார்த்தையாய்ப் பேசிக்கொண்டிருக்கிறுர்கள்.]

(நான்) வெறியன் இஷ்டம்போல்நடந்து அவனையேமாற்றினைத் தூசரி சீட்டுவிளையாடலாம் வா என்றேன்.

(வெறியன்) பலேபேஷ், அஹாஹா, பஹதூர்சிங்கக்குட்டியே அப்படிவா நான்போடுகிற சீட்டை எடுத்துக்கொள் 108. ஆட்டம்.

[சீட்டு விளையாடுகிறார்கள், மழைகாற்று வீசுகிறது சிறுதூத்தல்கள் தூறுகின்றன மின்னல் மின்னிக்கொண்டிருக்கிறது,

(வெறியன்) திரும்பிக்கொண்டு அடே யாரடா என்மீது தண்ணீர்தெளிப்பது சீட்டுஆட்டத்தைநிறுத்தும்! யார்என்மீது அவ்வளவு தைரியமாய்த் தண்ணீர் தெளிப்பது!

(நான்) மழைகாற்றடிப்பதால் கூண்டு இனி யேதேனும் ஆபத்தான இடத்தில் விழுந்து விடுமோவென நினைத்து காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளென்றவாறு, வெறியன் அந்தப்புறம் பார்த்துக்கொண்டிருக்கையில் தந்திரமாக சமயம் பார்த்து கூட்டிற்கும் நாங்கள் கீழ் இறங்குவதற்கு ஏற்பட்டுள்ள குடைக்கும் சம்மந்தமான கயிற்றை அறுத்துவிட்டேன். உடனே கூண்டு சற்று உயரம் சென்று காற்றால் ஒருபக்கமாக ஒதுங்கிக் கீழ்நோக்கிற்று. நாங்களும் குடையின் உதவியால் கீழ் இறங்கிக்கொண்டிருக்கிறோம்.

(வெறியன்) அடேதோழா இதுஎன்ன நான்சொல்லியும் இவன் தெளிக்கிறான் பார்!

(நான்) ஆம் ஐயா, தங்களை இன்னுமொன்று அவனுக்குத்தெரியவில்லைபோல் இருக்கிறது அல்லது தங்களிடத்தில் அவனுக்குப் பயமில்லையோ?

[கூண்டு ஆதியில் காற்றால் கடல்புறமாகக் கொண்டு வரப்பட்டது என்றுசொல்லி யிருக்கிறோமல்லவா, இப்போது சமுத்திரஜலத்திற்கு நூறடி உயரத்திற்குள் இறங்கிவிட்டது.

(வெறியன்) பயமில்லையா, இதோ அவனைக் குத்துகிறேன் பார் விடாதே அவனைப்பிடி..

[வெறியன் திடீரென கீழேவிழுந்து நீந்திக்கொண்டிருக்கிறான்.]

(நான்) சனியன் தொலைந்தது நாம் தப்பித்துக் கொண்டோம் என்று நினைத்துக்கொண்டு கீழேபார்த்தேன் பளிச்சென மின்னிற்று பளபளவென பிரகாசமாய் ஒரேவெளுப்பாய்ஜலம்தோன்றிற்று. சமுத்திரஜலம் சமீபித்துவிட்டது நாம் குதிக்காவிடின் குடைநம்மீது விழுந்து நம்மை ஜலத்தில் அழுத்திவிடுமெனத் திடீரெனக் குதித்தேன்.

[காற்றும் மழைதூத்தல் நின்று மேகங்கள் கலைந்து சந்திரன் நன்றாய்ப் பிரகாசித்துக்கொண்டிருக்கிறான். குடை ஜலத்தில் விழுந்து மிதந்துகொண்டிருக்கிறது.]

(நான்) குடைமேல் ஏறிக்கொண்டேன்.

***

(வெரியன்) அடே படகை இங்கே கொண்டுவா, எனக்குக் கை வலிக்கின்றது, இனிநீந்தமுடியாது என்ன நீ ஏறிக்கொண்டு பேசாதிருக்கிறாய்? இதோ வருகிறேன் பார் (நீந்துகிறான்)

(நான்) ஓகோ இன்னும் நம்மை சனியன்விடவில்லையே! ஓதெய்வமே! சற்றுமிரக்கமில்லையோ! உன்மனம் கல்லோ! இரும்போ!

]வெரியனும் ஏறிக்கொண்டான்! இவர்கள் உட்கார்ந்திருக்கும் குடைகாற்றால்தென்புறமாக மிதந்து வேகமாகப் போகிறது.]

(வெரியன்) அடே அண்ணா என் கப்பல் எங்கே இருக்கிறது. உனக்குத் தெரியுமா?

(நான்) ஏதோ சாமேல்லிவைக்கலாமென்று கப்பல் அதோ பார் அண்ணா அங்கே இருக்கிறதுநில்நாம் அங்கேதான் போகிறோம் என்றேன்

[கடற்கரை சிறியகிராமம் 4, 5, செம்படவர்படகுமிதந்துகொண்டிருக்கிறது ஒருகிழவன் நில்வாயிருப்பதால் மீன்பிடிக்க ஒரு படகில் ஏறிச்செல்லுகிறான்.]

(வெரியன்) அதோ பார், வ ) துரச , உண்மை உண்மை நம்மை அழைப்பதற்கு ஒரு படகு வருகிறது பார்.

(நான்) சற்று உற்றுப்பார்க்க ஒருகிழவன் ஒருபடகில் ஏறி எங்களை நோக்கி வருவதைப்போல் கண்டேன்.

[படகு சமீபித்து விட்டது.]

(வெரியன்) அடே யார் அங்கே இங்கேவா.

(கிழவன்) ஓ! ஓ!! இதென்ன பூதம் ... ... ... ... ம்

(வெரியன்) இங்கேவா போகாதே நில்.

[இவ்விருவரும்படகில் ஏறிக்கொள்ளுகிறார்கள் கிழவன்புலியைக் கண்ட பசுவைப்போல் நடுநடுங்குகிறான்.]

(நான்) சற்று பொறுத்து மெதுவாய் ஐயாகிழவனாரே நீர்எந்தூர் நீர் யார்.

(கிழவன்) அப்பா —— ஆ ஆ — நா—ன் செம்—படவன்.

(நான்) பயப்படாதீர் என்சனியன் உம்மையும்பிடித்துக்கொண்டது ஆயினும் விதியை மதியால் வெல்லலாம் நான் சொல்லுகிற— —

(வெரியன்) என்னபேச்சு விதியை மதியால் வெல்லலாமா! அது உண்மையே அதோ மதியைப்பார் அங்கேஇருக்கிறார் ஜலத்தில் நாம் அங்கே போனால் நமது விதி நீங்கிவிடும்.

[அப்போது சந்திரன் சாய்ந்து மறையப் போகிற சமயமாதலால் இவர்களுக்கு சந்திரன் ஜலத்தில் தூரத்தில் வீற்றிருப்பதுபோல் தோன்றுகிறது]

(நான்) மெதுவாய் ஐயா கிழவனாரே பயப்படாதிரும் இவன் வெரியன் இவனை நாம் இருவரும் சேர்ந்து ஜலத்தில் தள்ளிவிட்டுக் கரைபோய்ச் சேரலாம்

(கிழவன்) வெறியனா இவன்! இவனைத் தள்ளி விடலாமா? நீர் யார் — — — —

(வெறியன்) யாரைத் தள்ளுகிறீர்கள் கிழக்குரங்கே இதோ பார் உன்னைத் தூக்கிப் போடுகிறேன்.

[கிழவனைத்தூக்கி ஜலத்தில்போட்டுவிட்டான்சந்திரனைப்பிடிக்கப் படகை அதிகவேகமாகத் தள்ளுகிறான்.]

(நான்) சரி சரி நமக்கும் இந்த கதிதானோ என்ன செய்யலாம் என்று நினைத்தேன்.

(வெறியன்) அடே அண்ணா இதுஎன்ன நாம் போகப் போகச் சந்திரனும் போகிறானே.

[காற்றும் மழையும் கலந்து அடிக்கிறது.]

(தொடரும்.) J. S. நரசிம்மலு.

## பலதேசவர்த்தமானம்.

பலபாஷைகளைப்பேசும் ஓர் சிறுமி:—கர்னல் ஸ்டோனர் என்பவரின் புத்திரியாகிய மிஸ் வினிபர்ட் சக்வக்ஸ் டோனர் என்ற 8-வயதுள்ள சிறுமி இங்கிலீஷ், பிரஞ்சு, ஸ்பானிஷ், லடீன், எஸ்பரன்ட்ஸ், ஜப்பானிஷ், ருஷியன், ஜெர்மன், பாலிஷ், இட்டாலியன் முதலிய எட்டுப் பாஷைகளையும் பேசுகின்றதாம.

***

தபாற்கடிதங்களின் தொகை:—உலகமுற்றும் ஒரு வருஷத்தில் ஏறக்குறைய 1200 கோடி கடிதங்கள் எழுதப்படுகின்றனவாம். தினந்தோறும் எழுதப்படும் கடிதங்களின தொகை 3 கோடியே 30 லக்ஷமாம்.

***

ஹைகோர்ட்டு அடிஷனல் ஜட்ஜிகள்:—சென்னை ஸ்மால்காஸ்கோர்ட்டு சீப் ஜட்ஜ் மிஸ்டர் பேர்வெல்லேயும், பர்ஹாம்பூர் டிஸ்டிரிக்ட்ஜட்ஜ்திவான் பஹதூர T. சதாசிவ ஐயரவர்களையும் சென்னை ஹைகோர்ட்டுக்கு அடிஷனல ஜட்ஜ்களாய் இந்தியா கவர்ன்மெண்டார் நியமித்திருக்கிறார்கள்.

***

பெருமை:—ஒருசக்கரத்தின் மேல்பாகம் கீழேவரவும் கீழ்பாகம் மேலே போகவும அதிகநேரம ஆகமாட்டாது. "உடைமையும் வறுமையும் ஒருவழி நில்லா" என்ற கொன்றைவேந்தனில் ஒருவசனமு மிருக்கிறது. ஒற்றுமை, பொறுமை, பொருமை, வறுமை, சிறுமை, தனிமை என்னப்பட்ட இந்த ஆறுவித மைகளையும் பாத்திரமறிந்து பயன்படுத்திக் கொள்பவர்கள் ஏழாவது மையாகிய பெருமையைப் பெற்றுக்கொள்ளவும் அருகராவர்.

***

**ஒரு பசுவின் ஆகாரம்:**—1000-ராத்தல் எடையுள்ள பசு ஒன்று நாள் ஒன்றுக்கு 100-ராத்தல் தீவனம் தின்று ஜலம் குடிக்கும். பசுந்தீவனமானால் ஜலம் வேண்டியதில்லை. அதன் தீவனத்தில் 75-ராத்தல் ஜலமும், 25-ராத்தல் உலர்ந்த உணவும் இருக்கும். இதில் 10-ராத்தல் ஜீரணிக்க முடியாத நார் இருக்கும் 12-ராத்தல் மாவு சர்க்கரை முதலியன இருக்கும், 2½-ராத்தல் சிகனம், ½-ராத்தல் தைலமிருக்கும்.

***

**சில்வர் ஜுபிளி கொண்டாட்டம்:**—விருதுப்பட்டி க்ஷத்திரியவித்தியாசாலை ஹெட்மாஸ்டர் ஸ்ரீமான் N. S. மாணிக்கவாசகநாடார் அவர்கள் இந்தக் கல்லூரியில்(பாடசாலை) இருபத்தைந்துவருடம் மிகப்பொறுமையுடனிருந்து பாடசாலையை முன்னுக்குக்கொண்டுவந்த இம்மாண்புடையார் பெருமைகளை எழுதுவதென்றால் பெருங் காவியமாகும். இருபது முப்பது பிள்ளைகள் கொண்ட ஒரு சிறுபள்ளிக்கூடமாக மூன்றாவது வகுப்பாகவிருந்த இதனைச் சற்றேறக்குறைய 800-பிள்ளைகள் நிறைந்த பெரிய ஹைஸ்கூலாக்கி பெருமைபடுத்திய இவர் கல்வி வன்மை குணம் பொறுமை நன்றாய் விளங்காதா!

1912-ம் ௵ ஜனவரி-மீ 22-ந்தேதி திங்கட்கிழமை க்ஷத்திரிய வித்தியாசாலைத் திருமண்டபத்தில் மாலை 4-மணிக்கு திருநெல்வேலிக்கும் மதுரைக்கும் பிஷப்பாகிய ரெவரெண்டு டாக்டர் ஆர்தர் அச்சிசன் வில்லியம்ஸ் துரை எம். ஏ. அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் ஸ்ரீமான் N. S. மாணிக்கவாசக நாடார் அவர்கள் சில்வர் ஜுபிளிக்காகக் கூட்டம் கூடிற்று. மதுரை அமெரிக்கன்மிஷன் காலேஜ் பிரின்ஸ்பால்மிஸ்டர் ஷம்பரோதுரையவர்கள்தனது துரைசாணி சகிதமாக வந்திருந்தார். மற்றும் பல ஊர்களிலுமிருந்து துரைமார்களும் உத்தியோகஸ்தர்களும் விருந்தினராக வந்திருந்தனர். மிஸ்டர் ஷம்பரோதுரையவர்கள் கல்வியைப்பற்றிப் பிரசங்கித்தார். ஸ்ரீமான் N. மாணிக்கவாசக நாடார் அவர்களுக்கு அவரிடம் படித்த மாணாக்கர்களும் படிக்கும் மாணாக்கர்களும் 600-ரூபாய் பெறும்படியான வெள்ளிச்சாமான்கள் வெகுமதி யளித்தனர் ஆயிர ரூபாய்க்கு மேல் செலவு செய்து ஊரார்கள் கொண்டாடினார்கள். விருதுப்பட்டி வாசிகள் வாசித்தவர்களானதற்கும் பேசிச் சிறப்புறுதற்கும் க்ஷத்திரிய வித்தியாசாலையே காரணம், க்ஷத்திரிய வித்தியாசாலை ஊரார் பணச்செலவால் நடப்பினும் நிலைநிற்பதற்கு ஸ்ரீமான் N. S. மாணிக்கவாசக நாடார் அவர்களே காரணம். இவர் நெடுநாள் சம்பூரண செல்வம் பெற்று சுகத்தோடு வாழ எல்லாம் வல்ல இறைவனை எவ்வியும் பகலும் துதிக்கின்றோம்.

***

**வருஷப்பூர்த்தி:**—எஸ். பி. ஜீ. கழகத்துமாணவர் தமிழ்ச்சங்கத்து மூன்றாவது வருஷப் பூர்த்தி 1912-௵ பிப்பிரவரி-மீ 3-உயாகிய சனிக்கிழமை நடைபெறும்.

***

**ஸ்ரீசுகந்தகுந்தளாம்பிகைத் திருவருட்டமிழ்ச்சங்கம்:**—இச்சங்கத்து வருஷப்பூர்த்தி சீக்கிரம் கொண்டாடுமென்று எதிர்பார்க்கின்றோம்.

வீரிய விருத்திக்கும் இழந்த பலத்தையும் நரம்புபடுத்துவத்தையும்
திரும்ப அடைவதற்கும் உபயுக்தமான
இரண்டு உயர்ந்த ரத்னவுஷதங்கள்.

# மதன மஞ்சரி மாத்திரைகள்.

" நோயுள்ளவர்களுக்கும், நோயற்றவர்களுக்கும்,
ஆடவர்களுக்கும், ஸ்திரீகளுக்கும் உபயோகமானவை."

1. இவை, ஜீரண சம்மந்தமான கோளாறுகளைப் பரிகரித்து நல்ல பசியை உண்டாக்குவன.

2. இரத்தத்தை சுத்திகரித்து விருத்தி செய்து தேகத்திற்கு நல்ல இடத்தையும் மேனியையுங்கொடுப்பவை.

3. உடம்பில் ஏற்பட்ட எவ்விதநரம்புத்தளர்ச்சியையும் நிவர்த்தித்து நரம்பு ஸ்தானங்களுக்குப் படுத்துவத்தை அளிக்கத்தக்கவை.

4. கை, கால், கண், எரிச்சலைப் போக்கடித்து மூளையைக் குளிரச்செய்து ஞாபக சக்தியை விசேஷித்துத் தருபவை.

5. ஸ்திரீகளுக்குண்டாகும் கர்ப்பப்பை சம்பந்தமான சகலவித துன்பங்களையும் நிவர்த்திப்பவை.

etc. etc.

40-மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூபா 1.

## தபும்லகத்வாரி கிருத்.

இக்காலத்தில் சாதாரணமாக வாலிபர்களுக்கு சகவாஸ தோஷத்தால் ஏற்படும் துராப்பியாசங்களால் உண்டாகும் ஜன்மேந்திரிய நரம்புத்தளர்சசிக்கும் ஆண்தன்மைக்குறைவிற்கும் கைகண்ட ஔஷதம்.

2-தோலா கொண்ட டப்பியின் விலை ரூ 1.

எங்கள் ஔஷதங்களையும், அவற்றின் ஆச்சரிய முண்டுபண்ணத்தக்க குணங்களையும் குறித்து, அவ்வௌஷதங்களை உபயோகித்து சௌக்கியம் பெற்றவர்களில் மகாராஜாக்கள், ராஜாக்கள், ராஜகுமாரர்கள், மந்திரிகள், ஜமீந்தார்கள், அமீர்கள் முதலானோர்கள். ஆயிரக்கணக்கானநற்சாக்ஷிப்பத்திரங்கள் நாங்கள் தேடாமலும், கேளாமலும் அனுப்பி யிருக்கிறார்கள்.

மேலே சொல்லிய மருந்துகளைப் பற்றியும் எங்கள் வைத்திய வித்தியா புஸ்தகத்தை வாசியுங்கள். அது சுகத்துக்கும் ஐசுவரியத்துக்கும் க்ஷேமத்துக்கும் பெரிய வழிகாட்டியாகும்.


இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு, குஜராத்தி, முதலிய எந்தப் பாஷையில்வேண்டுமானாலும் இந்தப் புஸ்தகத்தை இனமாக தபால் செலவுகூட இல்லாமல் அனுப்புவோம்.

லக்ஷக்கணக்கான புஸ்தகங்கள் இதுவரை செலவாயிருக்கின்றன.

## ராஜவைத்திய நாராயண்ஜீ கேசவஜீ.

புரொப்ரைடர் ஆயுர்வேதோதய ஔஷதாலயா

No. 177, சைனாபஜார்ரோட் ஜமேதார் காட்டுக்கெதிரில் சென்னை.



பண்டிதர் K, S. கிருஷ்ணசாமி ஐயருடைய 'எலக்டிரிக்பாம்' என்னும் சூலைநிவாரணித் தைலம், இத்தைலத்தை மேலுக்கு தேய்ப்பதினால் வாதரோகம், முழங்கால் வீக்கம், இடுப்புநோய், பிடிப்பு, பக்கநோய், தலைவலி, ஒற்றைத்தலைவலி, மண்டையிடி, பல்பீர் வீக்கம், தொண்டை கம்மல், இருமல், மார்சளி, ஜலதோஷம், இசிவு, சுளுக்கு, தேள் கொட்டு முதலிய விஷக்கடி முதலிய வியாதிகளையும் குழந்தைகளுக்கு காணுகிற மாந்த யிழுப்பு முதலியவைகளையும் அதிசீக்கிரத்தில் சொஸ்தப்படுத்தும் ஓர் சிறந்த தைலம்.

விலை புட்டி 1-க்கு 0—12—0.

ஏஜண்டுகள், P. கணேசரத்னம் பிள்ளை
கடைத்தெருவு 86 நெ. கடை, சேலம் & சர்மா & கோ,
திருச்சிறுப்பள்ளி தெப்பக்குளம்.

இவ்விடங்களில் விலைக்கு வாங்கிக்கொள்ளலாம்.

---

# VALUEABLE ASSET FOR VACANCY SEEKERS.

## THE NATIONAL TYPE-WRITING INSTITUTION.

**Sanjeevi Row's lane [Near Little Market]**

*TRICHINOPOLY.*

**Imparts instructions in:—**

Type-writing — Book-keeping and
Shorthand — Commercial correspondence

STUDENTS ARE COACHED UP BY SPECIALISTS AND PROFESSIONAL MEN HOLDING FIRST CLASS CERTIFICATES.

*Games:*—Special arrangements are made for games such as Badminton and Foot-Ball.

Scholarships are awarded to students passing their Examinations with distinction

*For particulars apply to:—*

**Mr. V. N. Barathy.**
*Managr*

# தமிழபிமானிகளும் நமது செந்தமிழ்ச் செல்வம் சந்தாதாரர்களுமான பெருங்கருணையாளர்பால் ஓர் வேண்டுகோள்!

நமது செந்தமிழ்ச்செல்வம் பத்திராதிபர் சைவமகாசமாஜத்தின் 6-வது வருஷப்பூர்த்திக் கொண்டாட்டத்தில் ஒரு பிரசங்கியாராகச் சென்னைக்குச்சென்றிருந்தமையாலும் கார்காலஉபந்நியாசங்கள் செய்யச் சிற்சில ஊர்களுக்குச் சென்றிருந்தமையாலும் இவர்களைத் தலைமையாகக் கொண்ட இரண்டு சங்கங்களின் வருஷப்பூர்த்திக் கொண்டாட்டத்தை நடத்தி வைக்கவேண்டி நேர்ந்ததாலும் நமது செந்தமிழ்ச் செல்வம் தைமாதத்துப் பத்திரிகை தைமாத முதற் பாகத்தில் வெளிவராமல் பின்பாகத்தில் வெளிவருகின்றது. இதனைப்பொறுத்து ஏற்று தமிழ்விருத்தி கருதி எப்பொழுதும் நமது செந்தமிழ்ச் செல்வத்திற்குச் சந்தாதாரர்களாக விருந்து பத்திராதிபருக்குத் தம்மாலான உதவிகளைச் செய்து தமது கல்வி விருப்பு தாய்மொழியினிடத்துள்ள அபிமானம்பொதுநலங்கருதல் முதலிய தமது சிறந்த குணங்களைப் பரிமளிக்கச்செய்ய வேண்டுகின்றோம்.

நமது செந்தமிழ்ச்செல்வம் மென்மேலும் விருத்தியாவதற்கான ஏற்பாடுகள் மென்மேலும் நடந்துகொண்டிருக்கின்றன.

நமது செந்தமிழ்ச்செல்வம் நின்று நிலைக்க நமது அன்பர்கள் ஆசீர்வதிப்பார்களாக.

**கா. அ. ட. நாராயணசாமி.**
மானேஜர்.


**EMPIRE OF INDIA LIFE ASSURANCE Coy. (LTD.)**
**BOMBAY.**

Advantages: Purely Indian; Absolute Government Security: Premiums lower than English or Foreign Companies; High Surrender Values; Loans 6%; Quick settlement of claims &c.

Please Apply to:—
J. G GNANADURAI,
S/o Mr. J. GNANAMUTHU B. A.
Puthoor, Trichinopoly.